# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22:20

சகோ. காலேப் யோசுவா
2வது குறுக்குத் தெரு, 11.திருமால் நகர்
பூவிருந்தவல்லி, சென்னை. 600 056

## பரிசுத்த முத்தம் அன்பின் முத்தம் திருமண முத்தம்
## Holy Kiss Kiss of Charity Wedding Kiss

ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள். 1கொரி.16:20 - அப். பவுல்
ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள். 1பேது.5:14 -அப். பேதுரு
திருமணத்தில் மணமகன் மணமகள் ஒருவரையொருவர் உதட்டில் அல்லது கன்னத்தில் முத்தமிடுங்கள். சென்னை, பெரவலூர், சென்னை சபை - பாஸ். ஐசக் வசந்தக்குமார்

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக, கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான்: சென்னை, பெரவலூர், **சென்னை** சபையாருக்கும், லவோதிக்கேயா சபைக்காலத்தில் வாழ்ந்து, அக்காலத்துக்குரிய செய்தியில் வளர்ந்து வரும் தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. இந்நாட்களில் சென்னை, பெரவலூர், **சென்னை சபை** (Church at Madras)யில் விவாக ஆராதனை வேளையில் மணமகன் மணமகளையும், மணமகள் மணமகனையும் ஒருவர் மற்றொருவருடைய வாயின் உதடுகளில் அல்லது கன்னத்தில் முத்தமிட வேண்டும் என்ற இரண்டாம் கை மாற்க்க உபதேசம் (Second hand religious doctrine) மேல் நாடுகளின் கலாச்சாரங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, நடைமுறையில் இருப்பதை அறிய வந்தேன். ஏன் இவ்வாறு எழுதுகிறேன் என்றால் தீர்க்கதரிசி திருமண முத்தத்தை தேவனுடைய சபையில் ஒரு போதகமாகக் கொண்டு வரவில்லை. இந்த வேற்றுமையான உபதேசத்தை அறிந்த ஓரிரு பாஸ்டர்களும், சில விசுவாசிகளும் என்னிடம் முறையிட்டு இது குறித்து என்னுடைய அபிப்பிராயத்தையும் கேட்டது உண்டு. ஒரு பாஸ்டர் என்னிடம் சென்னை சபையில் நடக்கும் திருமண ஆராதனை காட்சிக்கு (A) சர்ட்டிபிக்கெட் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இந்தக் காட்சி நமது இளம் வயது பிள்ளைகளை கெடுக்கும் என்றார். ஆதலால் திருமண ஆராதனை சென்னை சபையில் முதியோர்களுக்கு மட்டும் என்று அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றார்.

3. நான் சென்னை வந்த பிறகு, கூடியமட்டும் மாதம் ஒரு முறை **சென்னை சபைக்குச்** சென்று வருகிறேன். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் மதிய உணவுக்கு என்னை அழைத்து உபசரிப்பது உண்டு. நீங்கள் அங்கு செல்லும் சமயம் அவர் உங்களை அவருடைய சபை பக்திவிருத்திக்காக எடுத்துப் பிரயோஜனப்படுத்துவதில்லை, பிரசங்கபீடத்தை உங்களுக்குக் கொடுப்பதில்லை, ஆதலால் ஆவிக்குரிய காரியங்களில் பாஸ்டர் உங்களை அவமதிக்கிறார், மாம்சத்துக்கடுத்த காரியங்களில் உங்களை நன்கு உபசரிக்கிறார், இப்படியிருக்க நீங்கள் அவருடைய சபைக்கு எப்படி போய் வரலாம், அவர் கொடுக்கும் காணிக்கைக்காகத்தானே என்று என்னை சிலர் விமர்சித்து இந்நாள் வரைக்கும் வருவது உண்டு. சிலர் என்னிடம் இதை நேரிடையாகக் கேட்டதும் உண்டு. நான் பிரசங்கிப்பதை மட்டும் அல்ல, பிறர் பிரசங்கத்தையும் கேட்க வாஞ்சையுள்ளவன். அநேக வேளைகளில் அவர் பிரசங்கத்தில் எனக்கு ஆவியில் ஒருமனம் ஏற்படும். ஆதலால் நான் **சென்னை சபைக்குச்** சென்று வருகிறேன். மற்றபடி என்னை அவரது சபையில் உபயோகிப்பது, உபயோகிக்காமல் இருப்பது அவரது சுயாதீனம். அதை நான் கேள்வி கேட்க முடியாது என பதில் கூறுவதும் உண்டு. உங்கள் பாஸ்டர்களில் பலர் மகத்தான பிரசங்கிகள். அவர்கள் பிரதான தூதர்களைப் போல வார்த்தையைப் பிரசங்கம் பண்ண முடியும். இருப்பினும் அது தேவனுடைய சித்தம் அல்ல. இதை ஆவிக்குரியவர்கள் தான் புரிந்து கொள்ள முடியும்.

4. பொதுவாக என்னை அநேக பாஸ்டர்கள் தங்கள் சபைகளில் உபயோகப்படுத்துவது இல்லை. ஏனென்றால் அவர்களது தவறுகளை நான் சுட்டிக்காட்டுவேன். அவர்கள் மாய்மாலத்தைக் கண்டிப்பேன். அவர்களுடைய குறைகளை எடுத்துக் காட்டுவேன். அவர்களது தவறுகள் அம்பலப்படுத்தப்படுவதை அவர்கள் விரும்புவது இல்லை. ஆதலால் பொதுவாக என்னைப் பிரசங்கப் பீடத்தில் ஏற்றப் பயப்படுவார்கள். அவர்களுடைய காரியங்கள் வெளிப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை. தேவனுடைய சபை பாஸ்டர் ஊழியத்தை மட்டும் கொண்டு செயல்படுவதில்லை. மாறாக ஐந்து வகை ஊழியங்களைக் கொண்டு அது செயல்படுத்தப்பட வேண்டும். இதுவே அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசம். எபே.4:11-13. ஆனால் சபைகளில் பாஸ்டர் வணக்கமே காணப்படுகிறது. இதர ஊழியங்களைப் பற்றி யாரும் கவலைப்பட்டுக் கொள்வதில்லை. எல்லாம் பாஸ்டர் மயமாகவே இருக்கிறது. ஏனென்றால் இது கொடுதான வஞ்சிப்பின் காலம். பொதுவாக இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம், உபதேசிக்கிறோம் எனக் கூறும் பாஸ்டர்கள் என்ன செய்கிறார்கள்? ஜனங்களுக்கு ஒரு சிறு பிரசங்கம் செய்து ... சினிமாக் காட்சி அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் போல அவர்களுக்கு பொழுதுபோக்கை அளிக்கத்தக்கதாகவும், அவர்களுக்கு சிரிப்பு மூட்டத்தக்கதாகவும் சில நகைச்சுவை துணிக்குகளைக் கூறி, ஒரு சிறு ஜெபம் செய்து, அவர்கள் இக்காலத்திற்குரிய செய்தியைக் கடைப்பிடித்துவிட்டனர் என்னும் திருப்தி கொண்டவர்களாய் அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுகின்றனர். ஜனங்களும் ஒரு பாஸ்டர் தங்கள் விருப்பத்திற்கேற்ப வேதாகமத்திற்கு அர்த்தம் உரைத்து, இக்காலத்திற்குரிய செய்திற்கு விளக்கம் கொடுத்து அதைக் கேட்பதையே விரும்புகின்றனர்.

வேதாகமத்தின் மூலம், இக்காலத்திற்குரிய செய்தியின் மூலம் பரிசுத்த ஆவியின் சத்தத்திற்கு செவி கொடுக்க மறுக்கின்றனர். அவர்கள் ஒரு மனிதனையே பின்பற்ற விரும்புகின்றனர்.

5. 2004, ஜீன் மாதம் கடைசி வாரம் நான் எனது வழக்கப்படி சென்னை சபை சென்றிருந்தேன். அன்று பாஸ்டரது பிரசங்கத்தில் எனக்கு முற்றிலுமாக ஒருமனப்பாடு இல்லை. ஏனென்றால் அவர் சில வேற்றுமையான உபதேசங்களை தேவனுடைய சபையில் போதிப்பதைக் கேட்டேன், கண்டேன். பாஸ்டரது வீட்டில் என் வாயானது போஜனத்தை ருசிப் பார்ப்பது போல, சென்னை சபையில் என் செவிகள் பாஸ்டரது உபதேசங்களை சோதித்துப் பார்த்தது. அது முரணாக இருந்ததால் அதனுடன் ஒப்புரவாக முடியவில்லை. முதலாவது காரியம்: திருமண முத்தம். இரண்டாவது காரியம்: மாலை வேளையில் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிக்கப்பட வேண்டும் என்பது. திருமண முத்தம் குறித்து இங்கு நான் எழுதுகிறேன். மாலை வேளையில் கர்த்தருடைய இராப்போஜனம் ஆசரிப்பது தவறு என்பது குறித்து எனது அடுத்த செய்தித் தொகுப்பில் எழுதுகிறேன். அன்று எங்களது மதிய உணவு வேளையில் இந்த இரு காரியங்களில் எனது ஒருமனமின்மை குறித்துப் பாஸ்டரிடம் பேசினேன். அவர் தன் நிலையை உறுதிப்படுத்தி விவரித்தார். ஆனாலும் எனக்கு அதில் மீண்டும் முற்றிலுமாக ஒருமனப்பாடு கிடைக்கவில்லை. அந்த வேளையில் பாஸ்டர் ஏழாம் சபைக்காலத் தூதன் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் இந்தச் சடங்காச்சாரத்தைக் கடைப்பிடிப்பதாகவும், ஆதலால் அவரும் சென்னை சபையில் இந்தச் சடங்காச்சாரங்களைப் பின்பற்றுவதாகவும் கூறினார். மேலும் இந்த உபதேசங்கள் சென்னை சபைக்கு மட்டும் உரியதாகும். இதை இதர சபைகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது இல்லை எனவும் கூறினார். அதே வேளையில் இவைகளை பிற சபைகளும் பின்பற்றினால் அது வரவேற்கப்படத்தக்க ஒன்று எனவும், கூடிய சீக்கிரத்தில் இவரது உபதேசங்கள் நம்முடைய சபைகள் அனைத்திலும் அங்கீகரிக்கப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கை தான் கொண்டிருப்பதாகவும் கூறினார். தங்கள் எண்ணத்தில் ஞானியாயிருக்கிற எவர்களையும் தேவன் மதிப்பதில்லை. இந்த உபதேசம் சென்னை சபைக்கு என்று மட்டும் கூறினதினால், தேவன் அவரை தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய பாஸ்டராக ஏற்படுத்தவில்லை எனவும் தேவன் அவரை கேடான சிந்தைக்கு ஒப்புகொடுத்தார் எனவும் ஆவியில் உணர்ந்தேன்.

6. இதற்கு உதாரணமாக அன்று ஸ்தீரியின் தலை முக்காடு விஷயத்தில், நமது பெண்களை சத்தியத்திற்கு கொண்டுவர மிகப் பிரயாசப்பட வேண்டியதாயிருந்தது. அதுபோல இந்தச் சடங்காச்சாரங்களையும் நம்முடையவர்கள் மத்தியில் முதலில் கொண்டு வருவது ஒரு பிரச்சனையாகத்தான் காணப்படும். பின் காலப் போக்கில் எல்லாம் சரியாகி விடும் என்றார். அவ்வாறாகவே தம்முடைய சபையாரையும் இதற்குள் கொண்டு வருவதற்கு தாம் மிக்க சிரமப்பட்டதாகவும், இப்பொழுது அதில் அனைவரும் உறுதியாக இருப்பதாகவும் கூறினார். ஆனால் நான் இங்கு கூற விரும்புகிறதாவது ஸ்திரீயின் தலைமுக்காடு அவளது நீண்டதலைமயிர் என்று தேவனுடைய வார்த்தை திட்டவட்டமாகக் கூறுகிறது. அதற்கு இக்காலத்திற்குரிய செய்தி நன்கு விளக்கம் கொடுத்து நம்மை சத்தியத்திற்கு வழிநடத்தியது. அதாவது தேவனுடைய வார்த்தையில் உள்ள ஒரு உபதேசம் தவறான முறையில் பின்பற்றப்பட்டது. பல ஆயிரம் ஆண்டு காலங்களாக இருந்து வந்த தவறான வழக்கத்தை சரிப்படுத்த மிகப் பிரயாசப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் இங்கு திருமண முத்தம் வேதவாக்கியங்களிலும் இக்காலத்திற்குரிய செய்தியிலும் காணப்படாத ஒரு உபதேசமாக இருப்பதால், இதை எதிர்க்க வேண்டிய ஓர் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

7. பாஸ்டரது விளக்கம் எனக்கு, எங்களுக்குள் கடந்த ஒரு ஆண்டு காலமாக இருந்த ஆவியின் ஒருமனப்பாட்டை சிதைக்குமோ, சீர்குலைக்குமோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியது. சகோதரர் இல்லத்தில் சகோதரரோடு அமர்ந்து பலமுறை மதிய உணவு புசித்திருக்கிறேன். எங்களது ஆகார வேளையில் சகோதரியின் உபசரிப்பைக் கண்டு பெருமைப்பட்டிருக்கிறேன். பிள்ளைகள் அங்கிள் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று கூறி புன்சிரிப்பை அள்ளி வீசம்போது மனம் மகிழ்ந்திருக்கிறேன். இந்நிலையில் இந்தச் செய்தித் தொகுப்பு எங்களுக்குள் ஒரு பிரிவினையை உண்டு பண்ணி விட்டதை நினைத்து மனம் நொந்தவனாகக் காணப்படுகிறேன். ஆனாலும் சபைக்கு சத்தியத்தை முகத்தாட்சனியம் பார்க்காமல் பிரசங்கிக்க, எடுத்துக்கூற வேண்டியவனாய் இருக்கிறேன். அவ்வாறு நான் கூறாவிட்டால் பின் ஒரு மாய்மாலம் பண்ணுகிறவனாகவே இருப்பேன். பாருங்கள், என் வாழ்க்கையில் நான் பல தவறுகளைச் செய்திருக்கிறேன். இன்னும் தவறுகளை செய்வேன். ஆனால் பணத்திற்காகவும், தசமபாகத்திற்காகவும் காணிக்கைக்காகவும் இதுவரை மாய்மாலம் பண்ணவில்லை. அது என் எண்ணத்தில் என்றுமே காணப்படாது. ஆதலால் இங்கு என் கடமையைச் செய்கிறேன். சகோ.ஐசக் வசந்தக்குமார் மற்றும் அவரது குடும்பத்தினரும், சென்னை சபையாரும் என்னைப் பொறுத்துக்கொள்வார்கள் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து தங்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்குரிய மனப்பக்குவத்தை கர்த்தர்தாமே அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நான் பிரார்த்திப்பது போன்று, பிரியமானவர்களே நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள்.

8. பாஸ்டர் அறிந்திருந்ததை நானும் அறிந்திருந்தாலும் அவரது விளக்கங்கள் எனக்கு அவரது சபையானது தகாத கற்பனைகளை மனதாரப் பின்பற்றிப் போவதாக காணப்படுகிறது. உணர்வில்லாத ஜனங்கள் அதில் சிக்குண்டு விழுவதாகத் தெரிகிறது. எனது அருமை சகோதரர் தன் உபதேசங்களைச் சீர்தூக்கிப்பார்த்து நலமானவைகளைப்பற்றிக் கொள்ள சத்திய ஆவி அவரைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும் என்ற நம்பிக்கையுடன் இந்தச் செய்தித் தொகுப்பை எழுதுகிறேன். இது தேவனுடைய சபைக்கும் பிரயோஜனமாக இருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். பிரியமானவர்களே, வாருங்கள் நீங்கள் உங்களை நல்ல மேய்ச்சலை மேய்கிற மந்தையில் உள்ள ஆடுகளாக அடையாளம் காட்டுங்கள். நான் என்ன எழுதுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா?

9. சுவிசேஷ உபதேசங்களுக்கு (Gospel Doctrines) அடுத்ததல்லாத காரியங்களில், சபையில் பாஸ்டர் தன் வரம்புக்கு உட்பட்டு சுயாதீன முடிவுகள் எடுக்க அவருக்கு முழு அதிகாரம் உண்டு. அந்தக் காரியங்களில் அவரை யாரும் தட்டிக்கேட்க முடியாது. அப்படிப்பட்ட காரியங்களில் அவர் எடுக்கும் ஒவ்வொரு முடிவுக்கும் சபைக்குத் தலையாகிய கிறிஸ்துவுக்கு உத்திரவாதம் உடையவராய் இருக்கிறார்.

10. இங்கு விவாக நிலையில் ஆண், பெண் திருமண முத்தம் தேவனுடைய சபையில் தேவைதானா? இந்தச் சடங்காச்சாரத்தின் அவசியம் என்ன? இது ஒரு ஆரோக்கியமான சடங்காச்சாரமா? கலாச்சாரமா? தேவனுடைய வார்த்தைக்கும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசங்களுக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் இந்தச் சடங்காச்சாரங்களுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் உண்டா என்பது குறித்து சிந்தித்து, ஆராய்ந்து அறிய வேண்டியது, ஆவியின் வழிநடத்துதலுக்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டியது பாஸ்டருக்கு மேல் உள்ள இதர மூன்று ஊழியங்களின் கடமையுமாய் இருக்கிறது. ஒரு லோக்கல் சபைக்கு மேய்ப்பனே முழு பொறுப்பு உடையவராக இருந்தாலும், அவர் தவறான உபதேசங்களை சபைக்குள் நுழைப்பாராகில், அவர் சரிசெய்யப்பட வேண்டியவரே. பாஸ்டருக்கு மேல் உள்ள உத்தியோகங்களைக் கொண்டு அவர் திருத்தப்பட தேவன் அனுமதிக்கிறார். Though Pastor is the head of a local Church, he is not beyond correction. God is allowing higher offices than the Pastor to correct him, there is somebody to intervene. அதே வேளையில் நீ இதைச் செய், அதைச் செய்யாதே, நீ இதைச் செய்யவேண்டும் என ஒரு சுவிசேஷகன் ஒரு பாஸ்டருக்குக் கட்டளையிடவும் முடியாது.

11. கவனியுங்கள் ஒரு சுவிசேஷகன், ஒரு பாஸ்டர் மேல் அதிகாரி அல்ல. ஒரு சுவிசேஷகன் பாஸ்டரும் அல்ல. பாஸ்டர் ஒரு சுவிசேஷகனும் அல்ல. ஆனால் ஒரு சுவிசேஷகன் ஒரு பாஸ்டருடைய ஊழியத்தை சில காலம் கர்த்தர் ஒரு பாஸ்டரை சபையில் ஏற்படுத்தும் வரை செய்யலாம். ஆனால் ஒரு பாஸ்டர், ஒரு சுவிசேஷகனுடைய பணியை செய்யக்கூடாது. ஏனென்றால் அது பாஸ்டர் அழைப்புக்கு உயர்ந்த உத்தியோகம் ஆகும். மேல் உள்ளவர்கள் கீழ் உள்ள பணியைச் செய்யலாம். கீழ் உள்ளவர்கள் மேல் உள்ளவர்கள் பணியைச் செய்யக்கூடாது. ஆதலால் ஒரு சுவிசேஷகன் தேவனுடைய சபையில் காணப்படும் உபதேசங்கள் சபை பக்திவிருத்திக்கேதுவானதா? அது தேவனுடைய வார்த்தையில் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களில், இக்காலத்திற்குரிய செய்தியின் அடிப்படையில் உள்ளதா என்பதை ஆராய்ந்து தன்னைப் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்து சபைக்குத் தெளிவுபடுத்த வேண்டியவனாய் இருக்கிறான். கடமைப்பட்டவனாயுமிருக்கிறான். அந்தப் பணியைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன்.

12. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைய கர்த்தர் என்னை சுவிசேஷகனாக ஏற்படுத்தி உள்ளபடியால் நான் தேவனுடைய சபையில் காணப்படும் சுவிசேஷ உபதேசங்களுக்கு உத்திரவாதம் உடையவனாய் இருக்கிறேன். தேவனுடைய சபையில் காணப்படும் உபதேசங்களைப் பகுத்தறிந்து சரியான உபதேசங்களை ஊக்குவிக்கவும், தவறான உபதேசங்களைச் சுட்டிக்காட்டி அவைகளைக் கண்டிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். உபதேசங்களுக்கடுத்த காரியங்களில் தேவனுடைய சபையை சீர்ப்படுத்த வேண்டிய உக்கிராணத்துவம் எனது ஊழியத்துக்கடுத்ததே.

13. ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் ஐக்கியம் கொண்டிருக்கும் சபை தேவனுடைய சபையாக இருக்குமானால் அது நிச்சயமாக எனது ஊழியத்தை அங்கீகரிக்கும். மாறாக அது ஒரு தனிப்பட்ட நபரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு தனியார் சபையாக இருக்குமானால் அது நிச்சயமாக என் ஊழியத்தை அங்கீகரிக்காது. பாருங்கள், நமது மத்தியில் சபைகள் உருவாகும் விதம் கீழ்கண்டவாறு சீர்கேடான, விபரீதமான நிலையில் இருக்கும்போது அவைகள் என் ஊழியத்தை எப்படி அங்கீகரிக்கும்? ஒருக்காலும் அங்கீகரிக்காது. நான் தனிமையாக நிற்க வேண்டிய ஒரு பாத்திரமே. அதுவே கிறிஸ்துவுக்குள் என் பங்கு. ஆதலால் கர்த்தர் எனக்குத் துணையாக நிற்கிறார்.

14. பல ஆண்டுகளுக்கு முன்பு சென்னை, பல்லாவரம், பாஸ்டர் சாமுவேல் தங்கமணி சபையிலிருந்து பலர் ஒரே நேரத்தில் பிரிந்து வெளியே வந்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு சபையை தங்களுக்கு ஸ்தாபித்துக் கொண்டார்கள். பிரிந்து வந்த ஒரு சிலரிடம் விபரம் கேட்டேன். பாஸ்டரிடம் சபைக்கு வரும் தசமபாகம், காணிக்கை, வரவு செலவு கணக்குகள் ஒன்றும் சரியில்லை. அவர் மனம் போல் பணத்தை செலவு செய்கிறார். ஆதலால் அவருடைய காரியங்களை பலர் விரும்பவில்லை, பிரிந்து வந்தோம் என்றனர். ஒரு சிலர், அதுவல்ல காரியம், சபையில் பலர் செய்தியில் வளர்ச்சியடைந்து காணப்படுவதால் அவர்களையும் அவரவர்கள் ஊழியத்தில் உற்சாகப்படுத்த வேண்டும். ஆனால் பாஸ்டர் அவர்கள் வளர்ச்சியை விரும்பவில்லை. தான்தான் ஆல் இன் ஆல் என்ற மனப்பக்குவம் அவருக்கு இருக்கிறது. ஆதலால் மற்றவர்களை ஊழியத்தில் உற்சாகப்படுத்துவதை விட்டுவிட்டு அவர்களை மட்டப்படுத்தினார். இதனால் சபையில் பிரிவினை வந்தது என்றனர். சிலர் நோ, நோ அதுவல்ல காரியங்கள். அவர் 1963ல் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்ற உபதேசத்தில் இருக்கிறார். மேலும் இந்த உபதேசத்தில் பச்சோந்தி போல் மாறி மாறி தன் கலரை காண்பிக்கிறார். ஒருத்தரிடம் தலையைக் காட்டுவார், மற்றொருவரிடம் வாலைக் காட்டுவார். ஆதலால் நாங்கள் பிரிந்து வந்தோம் என்றனர். இவ்வாறாக பிரிந்து வந்தவர்களுக்குள்ளே பலர் பல கருத்துக்களைக் கூறினார்கள். காரணங்கள் எதுவாக இருந்தாலும் அவர்கள் தங்கள் சொந்த, சுய ஆதாயத்துக்காகவே வெளிவந்தார்கள் என்பது எனது கணிப்பு.

15. முதலாவதாக சகோ.காபிரியேல் பக்தசிங் தனக்கென்று ஒரு சபையை தனது இரயில்வே இல்லத்திலேயே தாம்பரம் சேனட்டோரியத்தில் செட்டப் பண்ணிக்கொண்டார். இவர் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து வருகிறார். ஆதலால் ஞாயிறு அன்றுதான் இவரை சந்திக்க முடியும். வாரத்தில் ஆறு நாட்கள் முதல் எஜமானாகிய பிசாசுக்கு ஊழியம், ஊதியம். ஏழாம்நாள் மட்டும் இரண்டாவது எஜமானாகிய தேவனுக்கு ஊழியம், ஊதியம். இவருடைய பாணியில்தான் சிலர் நான் பவுலைப் போன்று சிறு தொழில் பார்த்துக்கொண்டு ஊழியம் செய்கிறேன் என்கிறார்கள். ஆனால் வாரத்தில் ஆறு நாட்கள் அவர்களை காண முடியாது, அவர்களைக்குறித்துக் கேட்டால் அவர் தன் தொழில் சம்மந்தமாக அங்கு சென்றிருக்கிறார், இங்கு சென்றிருக்கிறார் என்றே மறுபதில் வரும். ஆக இவரும் வாரத்தில் ஆறு நாட்கள் தன் தொழிலில், தன் சம்பாத்தியத்தில் ஈடுபடுகிறார். புதன் மாலை, ஞாயிறு காலை மட்டும் சபைக்கு வருகிறார், இதினால் ஓரளவு கை நிறைய தசமபாகம், காணிக்கைகள் வரவும் உண்டு. இவர்கள் எல்லாம் தேவனால் அழைக்கப்படாத, தங்களைத் தாங்களே பாஸ்டராக்கிக்கொண்ட, தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஊழியங்கள் செய்யும் ஊழியர்கள் ஆவர். இவர்கள் உங்களை நித்திய ஜீவனுக்கு வழிநடத்த முடியாது.

16. இரண்டாவதாக சகோ.அந்தோனிராஜ். ஒரு விதவை விசுவாசியின் இடத்தில், தகாத வழியில் பணம் சம்பாதித்த சில விசுவாசிகளுடைய ஆதரவினால் ஒரு கட்டிடத்தைக் கட்டி, சென்னை பொழிச்சலூரில் தன் சபையை ஸ்தாபித்துக் கொண்டார். அந்த விதவை தனது இடத்தைக் கேட்டாள். ஆனால் அந்த விதவையின் இடத்தை விட்டுக்கொடுக்க சிலகாலம் பாஸ்டருக்கு மனமில்லாதிருந்தது. ஆனால் இப்பொழுது இடத்தை விட்டுக் கொடுக்க முன் வந்து விட்டதாக அறியவந்தேன். இதை முன்பே செய்திருந்தால் நல்லப் பெயர் அப்பொழுதே கிடைத்திருக்கும்.

17. மூன்றாவதாக போட்டிக்கு சகோ.அந்தோனிராஜ் கட்டிடத்தை ஒட்டி சகோ.டேனியல் ராஜா ஒரு கொட்டகை போட்டுக்கொண்டு பாஸ்டர் சாமுவேல் தங்கமணியைக் கொண்டு தன்னைப் பாஸ்டராக பிரகடனம் செய்து அதாவது ஒரு பாஸ்டரைக் கொண்டு மற்றொரு பாஸ்டர் உற்பத்தி செய்யப்பட்டு, தன் உறவினர்களுக்குத் தன்னை பாஸ்டராக்கிக் கொண்டார். பல வெளிப்பாடுகள் இவரிடம் உண்டு. நமது மத்தியில் வெளிப்பாடுகள் கொண்ட பாஸ்டர்களுக்கு பஞ்சமில்லை.

18. நான்காவதாக இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பாஸ்டர் அந்தோனி ராஜ்யின் அண்ணன் சகோ.மோசஸ் பாபு இதென்ன? பொழிச்சலூரில் உங்கள் இருவருக்குத்தானா ஊழிய அழைப்பு? எனக்கு இல்லையா! பாஸ்டர் அலெக்ஸாண்டர் சாமுவேல் என்னை உதைத்து வெளியே தள்ளினதினால் நான் சோர்ந்து போகவில்லை. சகோ.காலேப் யோசுவா என் மாத வருமானத்தை பாழாக்கினதினால் என்ன? அதினால் என் மனம் மடிந்து போகவில்லை. இதோ பாருங்கள், என் பராக்கிரமத்தை உங்களுக்குக் காட்டுகிறேன். உங்கள் இருவரையும் ஒரு கை பார்த்து விடுகிறேன். இழந்த வருமானத்தைச் சம்பாதித்துக் காட்டுகிறேன் எனக்கூறி தன் வீட்டின் காம்பவுண்டுக்குள் ஒரு பகுதியில் ஒரு கொட்டகைப் போட்டு தன் தொழிலை ஆரம்பித்து விட்டார். அதனால் ஏற்பட்ட பிரச்சனைகள் போலிஸ்டேஷன் வரை சென்றது எனக் கேள்விப்பட்டேன். மேலும் இவரது அழைப்பு நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வரும். விசுவாசி, சுவிசேஷகன், பாஸ்டர் என மாறி மாறிக்கொண்டே சென்று கொண்டிருக்கிறது. ஒரு வேளை அது அப்போஸ்தலனில் போய் முடியுமோ என்ற ஐயம் இருக்கிறது. நிலையான ஊழியம் இல்லை, ஏனென்றால் அழைப்பு இல்லை. ஊதியத்தின் மேல் மட்டுமே கண்ணோட்டம்.

19. ஐந்தாவதாக அனகாபுத்தூர் சகோ.மேத்தியு கண்ணன். தன் வீட்டு மாடியில் ஒரு சிறு அறையைக் கட்டி கர்த்தருடைய இரண்டாம் வருகைக்குள் அக்கினிமயமான நாவுகள் அங்கு இறங்கி ஒவ்வொருவர் மீதும் அமராதோ என்று ராசி பலன்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

20. ஆறாவதாக சுவிசேஷகர் அந்தோனி ஜோசப். ஐயையோ என்னை எல்லாரும் அந்தரங்கத்தில் விட்டு விட்டு சென்று விட்டார்களே, அவர்கள் ஒவ்வொருவரும் தங்களைப் பாஸ்டராக்கிக் கொண்டார்கள். நான் இன்னும் சுவிசேஷகனாக இருக்கிறேனே, நான் என்ன செய்வேன்? முதலாளி ஸ்தானத்தில் உள்ள பாஸ்டர்கள் என்னை ஆதரிப்பார்களா? இன்றுவரை ஆதரிப்பதாகத் தெரியவில்லையே! எனக்கு வழியெல்லாம் அடைபட்டுக் கிடக்கிறதே!! கர்த்தாவே எனக்கும் திறக்க வேண்டும் என்று கதவைத் தட்டிக்கொண்டு வந்தார். ஆப்பிள் இந்தியா நிறுவனம் கதவைத் திறந்தது. ஆதலால் ஆப்பிள் இந்தியா நிறுவனத்தில் ரூ.550/- முதல் ரூ.3500/- வரை சம்பாதிக்க விவரத்திற்கு தன்னை அணுகும்படி தன் முகவரி, போன் 32816197 கொடுத்து தனது நற்செய்திப் பணியை செய்து வருகிறார். ஒரு காலத்தில் இந்த நற்பணியை **WBGNS** ஐ சார்ந்த பலர் அங்குள்ள சகோ.டேவிட் தலைமையில் செய்து வந்தனர். அதோடு மட்டுமல்ல. பல்லாவரம், பொழிச்சலூர் பகுதிகளில் உள்ள ஆட்டுத்தோலைப் போர்த்திய கள்ள கபடமுள்ள வேலையாட்கள் இக்காலத்திற்குரிய செய்தியில் பாஸ்டர்கள் எனக் கூறிக்கொண்டு இதே நற்பணியையே செய்து வந்தார்கள். இவர்களெல்லாம் பாஸ்டர்களாம், மானங்கெட்டவர்கள். எப்படியாவது பணம் எளிதான வழியில் சம்பாதிக்க வேண்டும், சுகபோகமாக வாழ வேண்டும், அது ஒன்றே இவர்களது குறிக்கோள். பின்பு நான்கு திசைகளிலுமிருந்து அந்த நற்பணிக்கு நெருக்கம் வந்ததால் அதை முடக்கி விட்டார்கள். ஆனால் சிலர் என்னிடம் அவர்கள் இந்தப் பணியை மறைமுகமாக இன்றும் செய்து வருகிறார்கள் என்று கூறினர். சகோ.அந்தோனி ஜோசப்பின் இந்த நற்செய்திப் பணி, சுவிசேஷ ஊழியம் எந்த அளவிற்கு நடக்கிறது என இந்நாட்களில் தெரியவில்லை.

21. ஏழாவதாக, எனக்குப் பிரியமான சகோ.பால் பன்னீர் செல்வம். கர்த்தர் நன்கு பாடல்கள் பாடும் தாலந்தை இவருக்கு கொடுத்திருக்கிறார். நான் இவரது பாடல்களை அடிக்கடி போட்டு மகிழ்வது உண்டு. ஆனால் இவர் தன்னை கைப்பிரதிகளில் சுவிசேஷகனாக அறிமுகப்படுத்துகிறார். அதைத்தான் என்னால் ஜீரணிக்கமுடியவில்லை. பாடல்கள் பாடிக்கொண்டு திரிவது ஒரு சுவிசேஷகனுடைய ஊழியமா? கேட்டதற்கு சிலர் அவ்விதமாக சுவிசேஷகன் என்று தன்னை அழைக்கிறார்கள், ஆனால் அவர் தன்னை ஐந்து வகை ஊழியத்தில் ஒரு சுவிசேஷகனாக அழைப்பது இல்லை என்றார். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். சுவிசேஷப் பாடல்கள் பாடுவது கர்த்தர் ஒருவனுக்கு கொடுத்த தாலந்து. ஆனால் சுவிசேஷகன் என்பது கர்த்தரால், தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஊழியம். ஆதலால் சுவிசேஷப் பாடல்களைப் பாடுகிறவன் ஒரு சுவிசேஷகன் என்று கூறக்கூடாது. கர்த்தர் இவரது பாடல் தாலந்துகளை உன்னதத்திலிருந்து ஆசிர்வதிப்பாராக.

22. எட்டாவதாக. எனது நீண்ட கால நட்பையுடைய சகோ.சார்லஸ் ராஜ்குமார். இவர் தன்னை விசுவாசி என்பார், மூப்பன் என்பார், டீக்கன் என்பார், சுவிசேஷகன் என்பார். தான் சுவிசேஷகனாக இருப்பதால் பற்பல சமயங்களில் தனக்கு கீழ் உள்ள இதரப்பணிகளையும் செய்கிறேன் என்பார். இவரது அழைப்பில் எனக்கு சந்தேகம். இது குறித்து இவரிடம் பலமுறை தர்க்கங்கள் செய்திருக்கிறேன். இப்பொழுது இவர், இந்தியாவில் தேவனுடைய சபை பக்திவிருத்திக்கா ஊழியம் செய்தது போதும், இனி வெளிநாடு சென்று அங்கு வீடு வீடாக வாசனைத் திரவியங்களை விற்று அங்குள்ள சபையை மனம் மகிழவிக்கும் வாசனைத் தைலங்களின் பரிமளத்தினால் பரவசப்படுத்தி பக்திவிருத்தியடைச் செய்யப் போகிறேன் என்று கூறி சென்றார். என்னிடம் அதை மறைத்தாலும், தேவன் அதை எனக்கு வெளிப்படுத்தினார். முடிவில் போன மச்சான் பூமணத்தோடு திரும்பி வந்துவிட்டதாக இந்நாட்களில் கேள்விப்பட்டேன்.

23. ஒன்பதாவதாக. எனது அருமை சகோதரன் விக்டர் ஆபிரகாம் ஊழியத்தை ஆரம்பித்தார், மூடினார். என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்ற ஒரு அனுபவமற்ற நிலை. இரு படகில் கால்கள். ஒரு கால் இக்காலத்திற்குரிய செய்தியில். மற்றொரு கால் ஸ்தாபனத்தில். முடிவு, அந்தோ பரிதாபம்!

24. பிரியமானவர்களே, இவ்வாறாக ஒரு பகுதியில், ஒரு சபையில் இருந்து ஒன்பதுக்கும் மேல் சபைகள் உருவாகின. இவர்களில் ஒவ்வொருவரும் தன் தன் வழியையும், அவனவன் தன் தன் மூளையிலிருந்து தன் தன் பொழிவையும் நோக்கிக் கொண்டு தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறார்கள். ஆதலால் தங்களைச் சார்ந்தவர்களிடம் இதோ திராட்சை ரசத்தை நாங்கள் கொண்டு வருகிறோம், நாம் அனைவரும் சேர்ந்து மதுவைக் குடிப்போம்; நாளையத்தினம் இன்றையத்தினம் போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும் எனக்கூறி கள்ள வார்த்தைகளை கர்ப்பம் தரித்து, இருதயத்திலிருந்து பிறப்பிக்கப்பண்ணுகிறார்கள். இவர்களில் பலர் கர்த்தருடைய வருகை வந்து விட்டது என்ற உபதேசத்தில் உள்ளவர்கள் ஆனால் அதை வெளிப்படையாகக் கூறமாட்டார்கள். இவர்களுடைய கிரியைகள் இவர்கள் யார் என்று வெளிப்படுத்துகின்றன. இவர்கள் தொழுவத்திற்குள் வாசல் வழியாய் பிரவேசியாமல், வேறு வழியில் ஏறினவர்கள். ஆனாலும் இவர்கள் ஒவ்வொருவரையும் சார்ந்து, நம்பி ஐந்து/பத்து ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களுக்காகப் பரிதாபப்படுகிறேன். இவர்களுடைய மனக்கண்கள் திறக்கப்படாதா? கர்த்தாவே திறந்தருளும் என்பதே எனது பிரார்த்தனையாக இருக்கிறது. இவ்வண்ணமாக இவர்களுடைய ஊழியங்களை நான் கடிந்து கொள்வதால் இவர்கள் என்னைப் பகைக்கிறார்கள். ஆனால் கடிந்து கொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி.

25. பாருங்கள் இவர்கள் செம்மையான வழியை விட்டு விலகி, அநேகரை வேதத்தைக்குறித்தும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசங்களைக் குறித்தும், இக்காலத்துக்குரிய செய்தியைக் குறித்தும் இடறப்பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்கள். தேவனால் ஏற்படுத்தப்படாத இவர்கள் தங்களுடைய மிகுதியான இனியச் சொற்களினால் சிலரை வசப்படுத்தி, தங்கள் உதடுகளின் மதுரவாக்கினால் அவர்களை தங்களிடம் இழுத்துக்கொள்கிறார்கள். இவ்வாறாக இழுத்துக்கொள்ளப்பட்டவர்கள் ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்லுவது போலவும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டு தண்டனைக்குப் போவது போலவும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறது போலவும் அவர்களைப் பின்பற்றிப் போகிறார்கள். இதுதான் இன்றைய சபையும் அதன் நிலையும். ஆதலால் பிரியமானவர்களே, எனக்குச் செவிகொடுங்கள். உங்கள் இருதயங்கள் அவர்களிடம் சாய வேண்டாம். அவர்கள் பாதைகளிலே மயங்கித் திரியாதீர்கள். அவர்கள் சபை பாதாளத்துக்குப் போகும் வழி. அது உங்களை மரண அறைகளுக்குக் கொண்டு போய் விடும். இவர்களது காரியங்களும், நடத்தைகளும் வழிப்போக்கர் மூக்கைப் பொத்துக்கொண்டு போகப் பண்ணும் அளவிற்கு துர்நாற்றமுள்ளதாக இருக்கிறது. தேவனுடைய செயலைக் கவனித்துப் பாருங்கள். அவர் கோணலாக்கிணதை நேர்மையாக்கத்தக்கவன் யார்?

26. சபை அங்கத்தினனே, தேவனுடைய வார்த்தை உரைத்துள்ள தகுதிகளை உன் சபை பெறாவிட்டால், அதைவிட்டு வெளியே வந்து, கிறிஸ்துவுக்குள் நுழைந்துகொள் என்பதே இக்காலத்திற்குரிய செய்தி. (மணவாட்டியைத் தெரிந்து கொள்ளுதல், பக்கம் 55, பத்தி 1) ஆனால் இவர்களோ ஆளுக்கொரு சபையை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஒரு பன்றி பத்து குட்டிகளைப் போட்டுள்ளது. அந்தப் பத்துமே பன்றிக் குட்டிகள்தான், வேறொன்றும் இல்லை. அது ஆட்டுக்குட்டிகள் ஆகாது.

27. தாவீதின் குமாரனும், எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கி: சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களை எல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாய் இருக்கிறது. கோணலானதை நேராக்கக்கூடாது. தேவனுடைய செயலைக் கவனித்துப்பார்; அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத்தக்கவன் யார்? பிர.1:15,7:13. பல்லாவரம், பொழிச்சலூர் பகுதிகளில் உள்ள ஊழியக்காரர்களே உங்கள் கிரியைகளினிமித்தம், வழிகளினிமித்தம் வெட்கி நாணமாட்டீர்களா? உங்கள் சபைகளில் எங்கும் நாற்றம். ஆதலால் உங்களை சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள் என அழைக்கிறேன். இதோ எனக்குப் பிரியமான தேவனுடைய பிள்ளைகளே உங்கள் பாதையில் படுகுழி உள்ளது. குருடர்கள் உங்களுக்கு வழி காட்டுகிறார்கள். ஆதலால் குழியில் விழாதபடி உங்களைக் காத்துக்கொள்ள பிரகாசமான மனக்கண்களைக் கர்த்தர் உங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

28. தீர்க்கதரிசியின் ஊழியப்பாதையில் நடந்த ஒரு சம்பவத்தை இன்று எழுதுகிறேன். அண்மையில் அவர்களில் சிலர் என்னிடம் இவ்விதம் பிசங்கிப்பதை விட்டு விடுங்கள். அப்படிச் செய்தால் நீங்கள் பெற்றுள்ள நண்பர்களின் நட்புத்தன்மையை பாழாக்கிக்கொள்வீர்கள். அதை விட்டு விடுங்கள். அவர்கள் செய்வது தவறு என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் அது நம்முடைய வேலை அல்ல என்கிறார்கள். அப்படியானால் அது யாருடைய வேலை? அது தவறா இருக்குமானால் அதை யாராவது சுட்டிக்காட்ட வேண்டும். எனவே அதை நாம் தொடர்ந்து செய்வோம். சுபையைக் குறித்து நான் அவ்விதமாகவே உணருகிறேன் என்கிறார். (இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், பத்தி 16) என் மீது அதிக அன்பு கொண்டுள்ள சகோதரர்கள் பலர் என்னிடம் இதையே கூறுவது உண்டு. அவர்கள் எனக்கு கூறும் அறிவுரைகளுக்கு தீர்க்கதரிசியின் செய்தியில் உள்ள இந்தப் பகுதி ஏற்றப் பதிலாக இருக்கிறது என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

29. அடுத்துப் பாருங்கள், பட்டாபிராம் சகோ.எட்வர்ட் சபைக்குச் சென்றால் 1963ல் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, ஆதலால் இனி கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் ஆசரிக்கத் தேவையில்லை என்கிறார். ஒரு ஊழியக்காரன் சகோ.பிரன்காம் கொடுத்த செய்தியை பேசாவிட்டால் பைபிளை கைளில் தூக்கக்கூடாது என்று கட்டளையிடுகிறார். உன் பாஸ்டர் சரியோ அல்லது தவறோ, நீ அவருடைய வார்த்தைக்கு கீழ்படி. அதாவது ஒரு விசுவாசி தன்னுடைய பாஸ்டர் தவறான உபதேசத்தைக் கொடுத்தாலும் அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்கிறார். இதென்ன? குருடர்கள் குருடர்களுக்கு வழி காட்டுகிறார்கள். இவர் போதனைகளைப் பார்க்கும்போது இவர் அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் தூதனாக இருப்பதாகத் தெரிகிறது. கலா.1:7&8 அவரைக் கேட்டால் இந்தப் போதகம் என்னையும், என்னைச் சார்ந்த ஓரிரு சபைகளுக்கு மட்டுமே என்கிறார். ஆனால் இது என்ன? பிசாசு.

30. அடுத்து வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் சபைக்குச் சென்றால் பெண்கள் சுடிதார் ஆடைகள் அணிந்து கொண்டு எங்கள் சபைக்கு வரக்கூடாது என்கிறார். ஆனால் அதே வேளையில் தன் மகள் மட்டும் சுடிதார் ஆடையை அணிந்து கொண்டு பள்ளிக்குச் சென்று வரலாம் என்கிறார். இதென்ன? இதுவும் பிசாசின் இரட்டைப் பிரமாணம். (Satan's double standard) பெண்கள் திருமண அடையாளம் மற்றும், ஏதாவது ஆபரணங்கள் அணிந்திருந்தால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மாட்டேன் என்கிறார். ஆனால் நிச்சயமாக ஒரு பெண் விவாக அடையாளம் ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும். அது அவள் சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள ஒரு அடையாளமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த அடையாளத்தைப் பார்த்து பிறர் இவள் திருமணம் ஆனவள் என்று அறிந்து கொள்வார்கள். சமுதாயத்தில் அல்லாத நவீன அடையாளம் ஒன்றை அணிந்தால், அதுகுறித்து சமுதாயத்தில் உள்ள பிறருக்குத் தெரியாது.

31. இந்த அடையாளம் குறித்து தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? To-day, if a woman is married, should wear a wedding ring as a sign that she's married. That's to keep other man from having anything to do with her. They look and they see she's a married women. In those days, they didn't have wedding rings, they had a tablet, they put it on their head. It had ten coins, and it went around their head.(The second coming of the Lord, Para 56 & 57 dt. 17.04.1957) நசரீன் மக்களே, விவாக மோதிரத்தை அணிந்துள்ள ஒரு ஸ்தீரிக்கு நீங்கள் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. அந்த மனப்பான்மை அவசியமில்லை. (கே.ப. 283 பத்தி 66) இங்கு தீர்க்கதரிசி மோதிரம் குறித்து பேசுகிறார். ஏனென்றால் அது அவர் நாட்டுக் கலாச்சாரம். நம் மத்தியில் பெரும்பான்மையினர் தாலியும், சிறுபான்மையினர் மோதிரமும் அணிகிறார்கள். இதில் எது அணிந்தாலும் அதுகுறித்து தவறு இல்லை. இதில் முக்கியமாக நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தாலியோ, அல்லது மோதிரமோ அலங்கரிப்புக்காக அணியப்படுவது இல்லை. மாறாக அது ஒரு அடையாளச் சின்னமாக இருக்கிறது. ஒன்றை அடையாளச் சின்னமாகவும், அலங்கரிப்புக்காகவும் அணிவதில் வித்தியாசம் உண்டு. ஆனால் அந்த அடையாளச் சின்னம் எதினால் செய்யப்பட்டதாக இருந்தாலும் அதுக்குறித்துப் பிரச்சனை இல்லை. அது பொன், வெள்ளி, சில்வர் எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. அடையாளமாக ஒன்றை அணியவேண்டும், அதுவே காரியம். இதை எனது நண்பர் நுங்கம்பாக்கம் சகோ.தேவநேசன் அவர்களும் அவரது முன்னாள் பாஸ்டர் சாமுவேல் அவர்களும் என்று உணர்வார்களோ?

32. இது எப்படியெனில் சபை தொடக்கக் காலத்தில் பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளாகிய சிலர் விருத்த சேதனம் பண்ணுகிறதும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறதும் அவசியம் என்று கூறி புறஜாதிகளில் விசுவாசிகளானவர்களைக் கலக்கி, அவர்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள். அவ்வண்ணமாகவே நமது தி பெந்தெகொஸ்தே சபைகளில், தென்னிந்திய திருச்சபைகளில் இருந்து வந்த விசுவாசிகளான பாஸ்டர்கள் தங்களது பழைய சபையினது பாரம்பரியங்களை அப்படியே தேவனுடைய சபைக்குள் நுழைக்க முயற்சிக்கிறார்கள். இதனால் தான் பெந்தெகொஸ்தெ சபைச் சேர்ந்தவர்கள் திருமண அடையாளம் எதுவும் அணியக் கூடாது என்றும், தென் இந்திய திருச்சபையை சார்ந்தவர்கள் ஸ்திரீகள் தங்கள் தலையை தங்களது சேலை முந்தாணையால் முக்காடிட வேண்டும் எனவும் போதிக்கிறார்கள். இவர்களுக்குள் இருந்த ஸ்தாபன ஆவி இன்னும் இவர்களை விட்டுப் போகவில்லை. அது தான் இதற்கு காரணம். ஆக வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் மற்றும் பாஸ்டர் ஜான் சாமுவேல் போன்றவர்களிடம் இருந்த ஸ்தாபன ஆவி இன்னும் அவர்களை விட்டு நீங்கவில்லை. அவர்கள் இரண்டும் கெட்ட நிலையில் உள்ளார்கள்.

33. அடுத்து பாஸ்டர் சாமுவேல் வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய இயேசு கிறிஸ்துவின் தூதன் ஏழாம் சபைக்காலத் தூதனாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் என்று சாதிக்கிறார். இதன் நிமித்தமாக நாளுக்கு நாள் புதுப்புது தகுதியற்ற ஆதாரங்களை கொண்டு வந்து வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத அவரது சபை மக்களை ஏமாற்றுகிறார். அவரும் இவருடைய அனைத்து தவறான உபதேசங்களைக் குறித்து கேட்கும் போது இந்தப் போதனைகள் என் சபைக்கு மட்டுமே என்கிறார்.

34. மூன்றாவதாக சூளைமேடு பாஸ்டர் ஜான் ஐசக் சபைக்குச் சென்றால், அங்கு ஒரு விசுவாசி அவிசுவாசியைத் திருமணம் செய்து கொள்ளலாம், அந்த திருமணத்தை நான் நடத்தி வைக்க எப்பொழுதும் தயாராக இருக்கிறேன் என்கிறார். கேட்டால் இது எனது சபைக்கடுத்த காரியம். நான் என் மனம்போல் நடக்க எனக்கு அதிகாரம் உண்டு. என் சபையில் எப்படியும் எனக்கு முன்பாக ஒரு கூட்டம் ஜனங்கள் உட்கார்ந்திருக்க வேண்டும். அதற்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்கிறார். கூட்டம், அதனால் கிடைக்கும் தசம பாகம், காணிக்கை ஆகிய ஆதாயங்களே எனது ஊழியத்தின் லட்சியம் என்கிறார். ஆனாலும் லட்சியத்தில் சுய நலம் இல்லை, பொதுநலம் உண்டு. அது பாராட்டத்தக்கது.

35. நான்காவதாக. பொன்னேரி பாஸ்டர் வில்பர்ட் இடம் சென்றால் நான் தேவனுக்கும் ஊழியம் (பாஸ்டர்) செய்வேன். அதே வேளையில் பிசாசுக்கும் ஊழியம் (தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இவர் பொறியாளராக பணி செய்கிறார்) செய்வேன் என்கிறார். இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும்போது ஒருவனைப் பகைத்து. ஒருவனை நேசிப்பான் என்ற தேவனுடைய வார்த்தை தவறு என்பதை நான் நிலைநிறுத்திக் காட்டிக்கொண்டிருக்கிறேன் என்கிறார். எனக்கு இரு எஜமான்களையும் நன்கு பிரியப்படுத்தி ஊழியம் செய்யத் தெரியும். நான் பல ஞாயிறுகளில் ஸ்பெஷல் பணியின் நிமித்தமாக வெளியே சென்று விட்டால் என்ன? எனது சபை மூப்பர் ஞாயிறு ஆராதனையை நடத்தி, பிரசங்கம் செய்து, சபை மக்களை ஆசீர்வதித்து அனுப்புகிறார். எப்படியாவது, யாரைக்கொண்டாவது என் ஊழியம் ஞாயிறு நடக்கிறது. நானும், மூப்பரும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, ஏதாவது ஒரு விசுவாசியைக் கொண்டாவது சபையில் ஞாயிறு ஆராதனை நடத்தியே தீருவேன், விடமாட்டேன் என்கிறார். ஆக ஆராதனை எந்த நிலையிலும் தடைபடாது என்கிறார். இவரையும் பாஸ்டர், பாஸ்டர் என்று கூறிக்கொண்டு ஒரு சிறுகூட்டம். இவர்களது நிலையும் அந்தோ பரிதாபம்!. இவரையும் கேட்டால், இவரும் இது எனது சபைக்கடுத்தக் காரியம். இதில் யாரும் தலையிட தகுதியில்லை. தேவைப்பட்டால் முதலாவதாக எனது மனைவியிடமும், அடுத்து சகோதரன் மோசஸ் தயானந்தத்திடமும் (WBGNS) ஆலோசனைக்கேட்டுக் கொள்வேன். ஒரு காலத்தில் பாஸ்டர் சாமி எனது குருவாக இருந்தார், காலங்கள் மாறிக்கொண்டு வருகிறதினால் நானும் எனக்கு ஆலோசனைக் கூறுபவர்களை மாற்றிக்கொண்டே வருகிறேன் என்கிறார். சாத்தானின் திறமையான ஊழியக்காரர்களில் இவரும் ஒருவர்.

36. ஐந்தாவதாக, சில காலம் நாடு, சில காலம் காடு; அதாவது கொஞ்சக்காலம் பாஸ்டர் ஊழியம், கொஞ்ச காலம் டேப் உத்தியோகம். பாஸ்டர் ஊழியம் டல் அடித்தால் டேப் உத்தியோகம். டேப் உத்தியோகம் டல் அடித்தால் பாஸ்டர் ஊழியம். ஊழியமும், உத்தியோகமும் போர் அடித்தால் வெளியூர் சுவிசேஷ ஊழியப் பயணம் என்கிறார் நடுவீரப்பட்டு பாஸ்டர் சகோ.ரவீந்தரராஜ். மேலும் தன் சபையில் பெண்களின் தலை முக்காடு அவர்களது சேலை முந்தானியே, அந்த சேலை முந்தானிதான் அவர்களுக்கு மகிமை என்கிறார் ஸ்திரீகளே, உங்களுக்கு ஒரு முக்காடு உள்ளது. அது ஒரு தொப்பி அல்லது கைக்குட்டை என்று எனக்கு காண்பிக்கும்படி நான் எவருக்கும் சவால் விடுகிறேன். உங்கள் தலைமயிர்தான் உங்களுக்கு முக்காடு. (நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல, பத்தி 125) நமது நாட்டில் தலையில் பெண்கள் தங்கள் சேலை முந்தானியை முக்காடாக உபயோகிப்பது போன்று அமெரிக்காவில் பெண்கள் ஒரு தொப்பியை அல்லது கைக்குட்டையை உபயோகிப்பது உண்டு. ஆதலால் தான் தொப்பி அல்லது கைக்குட்டைக் குறித்து தீர்க்கதரிசி கூறுகிறார். ஆதலால் சேலை முந்தானியைக் குறித்து அவர் எதுவும் கூறவில்லை எனக் கூறக்கூடாது. ஆக பாஸ்டர் ரவீந்திரராஜ் உபதேசங்கள் யாவுமே பொதுவாக தலைகீழாகத்தான் இருக்கும். மேலும், நான் ஊருக்கு உபதேசம் செய்கிறேன். ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யக்கூடாது. ஆனால் நான் பெற்ற பிள்ளைகளை மட்டும் ஒரு அவிசுவாசிக்கே திருமணம் செய்து கொடுப்பேன். கேட்டால் இவைகள் யாவும் எங்கள் சபைக் கலாச்சாரம் என்கிறார். மேலும் இந்தக் கலாச்சாரங்கள் யாவையும் நான் மணவாட்டிக் கூடாரம், பாஸ்டர் ஜான் சாமுவேல் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்கிறார். இவர்களுக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் எந்தவிதமான சம்பந்தமும் உண்டா? இல்லவே இல்லை. ஆனாலும் இவர்களை நம்பி ஒரு கூட்டம் நாளுக்கு நாள் மோசம் போய்க்கொண்டே இருக்கிறது.

37. ஆறாவதாக, ஏதோ ஓரிரு ஆட்களை வைத்துக்கொண்டு, தன்னைப் பாஸ்டர் என அழைத்துக்கொண்டு, இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்களுக்கு எங்கிருந்தாவது மாப்பிள்ளை பெண் பார்க்க தெருத்தெருவாக ஊர் ஊராக, நகரம் நகரமாக சுற்றி தரகர் பணிபுரியும் பாஸ்டர் பால் செபஸ்டியான், கும்மிடிப்பூண்டி. தரகு வேலைதான் தனது பாஸ்டர் வேலை என்கிறார். இது எப்படி என்று கேட்டால் என் சபைக்கடுத்தக் காரியம் என்கிறார். ஆக நமது மத்தியில் உள்ள பாஸ்டர்கள் யாரைக்கேட்டாலும் இது எனது சபைக்கடுத்தக் காரியம் என்றே கூறிக்கூறி தங்கள் காரியங்களைச் சமாளிக்கிறார்கள். கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயாதிருக்கிறார்கள். எவனாகிலும் ஒருவன் இது தனது சபைக்கடுத்த உபதேசம் என கூறினால், அவனுக்கும் தேவனுடைய சபைக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை. ஒருவன் தேவனால் ஏற்படுத்தப்பட்டவனாயிருப்பானாகில் அவன் இது தேவனுடைய சபைக்கடுத்த உபதேசம் என்றே கூறுவான். தேவனுடைய சபைக்கடுத்த உபதேசமானால் அது தேவனுடைய வார்த்தையில், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசங்களில் காணப்படவேண்டும். ஒரு பாஸ்டர் தேவனுடைய சபையில் உபதேசங்களைக் கொண்டு வரமுடியாது.

38. நம் மத்தியில் சிலர் தங்களை ஊழியக்காரர்கள் எனக் கூறிக்கொண்டுத்திரிவதைக் காண்கிறேன். இவர்களுடைய குடும்பக் காரியங்களைக் கவனிக்கும்போது மனைவி அரசாங்க அல்லது தனியார் ஸ்தாபனங்களில் பணிபுரிகிறாள். இவர்கள் குடும்பத்தில் சமையல் வேலை செய்துக் கொண்டு, அத்துடன் பாஸ்டர் ஊழியமும் செய்துக் கொண்டு வருகிறார்கள். அதாவது மனைவி சம்பாத்தியத்தில் குடும்பம் நடத்தி வருகிறார்கள். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இவர்கள் ஊழியம் செய்யத் தகுதியற்றவர்கள். பாருங்கள் இவர்கள் தங்கள் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிக்க வேண்டும். தன் சொந்த மாம்சமாகிய தன் மனைவியை இவர்கள் போஷித்துக் காப்பாற்ற வேண்டும். மனைவி வீட்டில் தரித்திருக்க வேண்டும். தியானியுங்கள் ஆதி. 3:17-19, எபே.5:29, தீத். 2:5, சங். 68:12,13. தீர்க்கதரிசியும் பெண்கள் வேலை செய்வதுக் குறித்து கண்டிக்கிறார். இது குறித்து நாம் ஏற்கனவே தியானித்து இருக்கிறோம். ஆக இவர்களது இல்லற வாழ்க்கை கிறிஸ்துவையும் அவருடைய சரீரமாகிய சபையையும் பிரதிபலிக்கிறதாக இல்லை. ஆதலால் இப்படிப்பட்டவர்கள் ஊழியம் செய்யத் தகுதியற்றவர்கள். ஜனங்கள் இவர்களைப் பின்பற்றுவதிலும் ஒரு பிரயோஜனமும் இல்லை. எந்த ஒரு ஊழியக்காரனுடைய மனைவி வேலை செய்ய வெளியே சென்றிருக்கிறாளோ, அந்த ஊழியக்காரனை தேவன் ஏற்படுத்தியதாக என்னாதீர்கள். அவர் தேவ சித்தத்திறகு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதோடு மட்டும் அல்ல, உங்களையும் ஏமாற்றுகிறவனாக இருக்கிறார்.

39. இப்படியாக இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மனம்போன போக்கில் நடந்து வருகிறார்கள். தேவனுடைய சபையில் இப்படிப்பட்ட குழப்பங்கள் காணப்படுமா? நம்முடைய தேவன் குழப்பத்தின் தேவனா? இல்லையே! தேவனுடைய சபையில் வேத உபதேசங்களில் ஊழியர்கள் அனைவரும் கைகோர்த்து நிற்கவேண்டும். இது என் சபைக்கடுத்த உபதேசம், அது உன் சபைக்கடுத்த உபதேசம் என்று கூறக்கூடாது. அவ்விதம் கூறுவார்களாகில் அவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்களே. பாருங்கள், சபையானது மனிதனால் நடத்தப்பட தேவன் அனுமதிப்பது இல்லை. தேவனே தமது சபையை நடத்திச் செல்கிறார். அவர் ஆவியின் வரங்களைக் கொண்டு சபையை நடத்திச் செல்கிறார். சபையில் சீர்திருத்தம் கொண்டு வரவே தேவன் சபையில் ஆவிக்குரிய வரங்களை அளித்திருக்கிறார். அவருடைய சபையில் ஐந்து ஊழிய உத்தியோகங்கள் அவருக்கு உள்ளது. பிரியமானவர்களே நீங்கள் சார்ந்துள்ள சபைகள் யாவும் தனியார் சபைகள் ஆகும். ஆதலால் இவர்கள் அவரவர்களுக்கு ஏற்றவாறு கொள்கைகளையும், கோட்பாடுகளையும், உபதேசங்களையும், போதனைகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். ஆனால் இந்தச் சபைகளில் தேவனுடைய வித்துக்கள் இருக்குமானால் அவர்கள் அதிலிருந்து வெளியே வந்து தேவனுடைய வார்த்தையின்படியும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களின்படியேயும், இக்காலத்திற்குரிய செய்தியின்படியேயும் தங்களைக் காத்துக்கொள்வார்கள்.

40. மேலும் இவர்கள் இது என்னுடைய சபைக்கு மட்டுமே உரிய போதனை, சடங்காச்சாரம், உபதேசம் என்று கூறுவதால் அவர்கள் சார்ந்திருக்கும் சபை தேவனுடைய சபையாக இருக்க முடியாது. நிச்சயமாக அவைகள் தனியார் சபைகளே. தேவனுடைய சபையில் எங்கும் உபதேசங்கள் ஒன்றாகவே இருக்கும். தேவனுடைய சபையில் உபதேசங்களுக்கடுத்த காரியங்களில் பிரிவினைகள் இருக்க முடியாது. அவ்வாறு இருக்குமாகில் தேவனுடைய சபை பக்திவிருத்தியடைய முடியாது. இந்த தனியார் சபைகள், கர்த்தர் தம்முடைய சரீரமாகிய

சபை பக்திவிருத்தி அடைவதற்காக ஏற்படுத்திய ஐந்து வகை ஊழியங்களை பெற்றுக்கொள்ளவில்லை. சபை பக்திவிருத்திக்கு தாங்கள் (பாஸ்டர்) மட்டுமே போதும் என்ற ஆணவத்தில் இருக்கிறார்கள். தேவனுடைய சபையில் பாஸ்டர் வணக்கம், பிரன்காம் வணக்கம் இருக்காது.

41. இந்நாட்களில் பொதுவாக நமது மத்தியில் உள்ள பாஸ்டர்கள் தாங்கள் மேய்ப்பனாக இருக்கும் சபையில் இது தேவனுடைய சபை என்று கூறுவதே கிடையாது. இது என் சபை, என் சபை என்றே கூறுகிறார்கள். ஆதலால் அவர்கள் மனுஷர்களுக்கு ஏற்றவைகளையே சிந்திக்கிறார்கள். இதில் திருமண முத்தம் ஒன்று. இதிலிருந்து இவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் தங்களைத் தாங்களே மேய்ப்பர்களாக ஏற்படுத்திக்கொண்டு, ஒரு கூட்டம் மக்களை தங்களது இனிய சொற்களால், சாதுரியமான நயவஞ்சகப் பேச்சினால் ஆதாயப்படுத்தி அவர்களை ஆளுகை செய்து வருகிறார்கள். நம்முடைய மத்தியில் உள்ள சில சபைகளில் பாஸ்டருடைய ஜாதிக்காரர்களே, குடும்பத்தினரே, நண்பர்களே அதிகம் இருப்பார்கள். ஜாதிகளின் அடிப்படையில், குடும்பத்தினர் அடிப்படையில் சபைகள் நடப்பது ஒரு பெரிய வெட்கக்கேடு. இதுவும் ஒரு வஞ்சகம். நாம் எந்த ஒரு சபைக்காலத்திலும் இல்லாத கொடிதான வஞ்சிப்பின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை ஆவிக்குரியவர்கள் நன்கு அறிவார்கள்.

42. பொதுவாக சென்னைப் பட்டிணத்தில் தேவனுடைய சபை பற்பல இடங்களில் எழும்பி செயல்பட்டு வருமானால், இவர்கள் மத்தியில் ஒரே விதமான போதனைகள், உபதேசங்கள் காணப்படவேண்டும். ஆனால் இவர்கள் ஒவ்வொருவரும் பிரிந்திருப்பதால் பிரியமானவர்களே நீங்கள் சார்ந்திருக்கும் சபை தேவனுடைய சபை என்று கூற முடியாது. மாறாக அது தனியார் சபைகளே. தனியார் சபைகளில் தனிப்பட்ட மனிதனுடைய (பாஸ்டர்) ஆதிக்கமே உண்டு. ஆதித் திருச்சபைக் காலங்களில் தெயூதாஸ், கலிலேயனாகிய யூதாஸ் சபை நடத்தியது போன்று இவர்களும் சபை நடத்துகிறார்கள். முடிவில் தெயூதாஸ் மடிந்து போனான். யூதாஸ் அழிந்து போனான். முந்தினவனை நம்பினவர்கள் சிதறி, அவமாய்ப் போனார்கள். பிந்தினவனை நம்பினவர்கள் அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். அப்.5:36&37. அதுபோன்றே நீங்கள் சார்ந்திருக்கும் தனியார் சபையும் அதன் முடிவும் இருக்கும் என்பதை எடுத்துக்கூறி உங்களை எச்சரிக்கிறேன். பாருங்கள் தெயூதாஸ் மற்றும் கலிலேயனாகிய யூதாஸ் இருவரும் தங்களை பாஸ்டராக்கிக் கொண்டு, ஒரு கூட்டம் உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாக பிடித்து, அநீதியின் கூலியினால் உல்லாசமாக வாழ்ந்து, ஆளுகை செய்து வந்தார்கள். அங்கு தேவனுடைய வார்த்தை இல்லை. மாறாக பாஸ்டர் வணக்கமே காணப்பட்டது. இன்று பாஸ்டர் வணக்கத்தை தக்க வைக்க பிரன்காம் வணக்கம் ஏற்பட்டுள்ளது. பிரன்காம், பிரன்காம் என்று துதி பாடும் ஊழியக்காரர்களே உத்தமமும், உண்மையுமான ஊழியக்காரர் என்று பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யைக் கூறி தங்கள் காரியங்களை சமாளிக்கிறார்கள். புத்திக் கூர்மையான பாஸ்டர்கள் தேவனுடைய வார்த்தையை நன்றாக ஒருங்கிணைத்துக் கொடுக்கமுடியும். அன்று தாவீதுக்கும், அப்சலோமுக்கும் அகித்தோப்பேல் சொல்லும் வார்த்தை தேவனுடைய வார்த்தையைப்போல் இருந்தது. அதுபோல் பிரன்காமைத் துதிக்கிறவர்கள் வாக்கு இந்த ஜனங்களுக்கு தேவனுடைய வாக்காக இருக்கிறது. ஆனாலும் சாத்தான் பிரன்காம் பெயரைக்கொண்டு தன் ஊழியக்காரர்களை சபைகளில் பாஸ்டராக வைத்து மக்களை வஞ்சித்து வருகிறான் என்பதை இவர்கள் அறியாதிருக்கிறார்கள். இதை ஒருவன் எடுத்துக் கூறினாலும் இவர்கள் நம்பாதிருக்கிறார்கள். இவர்கள் குருடரால் வழிநடத்தப்படும் குருடர்களாய் இருக்கிறார்கள். அந்தோ! இந்த மக்கள் நிலமை பரிதாபம்!

43. மக்களுக்கு அவர்கள் சார்ந்திருக்கும் சபைப் பாஸ்டரின் உபதேசங்களே தேவனுடைய வாக்காகக் காணப்படுகிறது. ஆனால் சபையில் கள்ள கபடமுள்ள வேலையாட்கள் உண்டு என்பதை மறந்து விடுகிறார்கள். எல்லாம் பாஸ்டர் மயமாகக் காணப்படுகிறது. பாஸ்டருக்கு அனைவரும் ஆமென், ஆமென் என்கிறார்கள். முடிவில் அவர்கள் சார்ந்திருக்கும் பாஸ்டரும் அவமாய்ப் போவார். அவர்களும் சிதறடிக்கப்பட்டுப் போவார்கள் என்பதை மக்கள் என்று உணர்வார்களோ? இவர்கள் கண்கள் என்று திறக்கப்படுமோ? பிரியமானவர்களே நீங்கள் இன்று சென்று வரும் உங்கள் சபையும் அதே நிலையில்தான் உள்ளது என்பதைத் திரும்ப, திரும்ப கூறி உங்களை எச்சரிக்கிறேன். இவ்வாறாக உங்களை எச்சரிக்க வேண்டியது என்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. இன்று அநேக போலிகளும், போலியான ஊழியங்களும், போலியான செயல்களும் காணப்படுகின்றன. ஆதலால் ஒரு பாஸ்டர் இது என் சபை, இது எனது சபைக்கடுத்த காரியம் என்று கூறினால் அது குறித்து சிந்தித்து செயல்படுங்கள். இது கொடிய வஞ்சிப்பின் காலம். கள்ளக் கபடமுள்ள வேலையாட்கள் நிறைந்த காலம். உங்கள் மேய்ப்பன் உங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கமுடியாது. அதை இயேசு கிறிஸ்து மட்டுமே உங்களுக்கு கொடுக்கமுடியும் என்பதை நினைவு கொள்ளுங்கள். சென்னை சபையோடு, கல்வாரி சபையோடு, ஏல்பெத்தேல் சபையோடு, இன்னும் உங்கள் மத்தியில் உள்ள நூற்றுக்கணக்கான சபைகளோடு ஐக்கியமாய் இருப்பதற்கு தேவன் உங்களை அழைக்கவில்லை. தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கே தேவன் உங்களை அழைத்திருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள். 1யோ.1:3, 1கொரி.1:9. ஆதலால் சபைகளை குறித்து, ஊழியர்களைக் குறித்து வைராக்கியம் பாராட்டாதீர்கள். அப்படி வைராக்கியம் பாராட்டுகிறவர்கள் கிறிஸ்துவினுடையவர்கள் அல்ல.

44. தேவனுடைய சபையில் மேய்ப்பனுடைய ஊழியம் ஆதாயத்துக்காக அல்ல. இவர்கள் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்ய வந்தவர்கள். ஆனால் நம் மத்தியில் உள்ள மேய்ப்பர்களில் பலர் ஆதாய நோக்கத்துடனே பாஸ்டர் ஊழியம் செய்கிறார்கள். வயிற்றுப் பிழைப்புக்கே, கூடுதல் வருமானத்திற்காகவே, சுகபோகமான வாழ்க்கைக்காகவே, மதிப்புக்கும் கௌரவத்துக்காகவுமே பாஸ்டர் ஊழியம் செய்கிறார்கள். தேவனுடைய சபைக்கு கட்டிடம் எனக்கூறி பல இடங்களிலிருந்து விசுவாசிகளைக்கொண்டு பணம் வசூல்செய்து, கட்டிடத்தைக் கட்டி முடித்து அதை தங்கள் பெயரிலேயே தக்க வைத்துக் கொள்கிறார்கள். அப்படியானால் இவர்கள் யார்? கள்ளனும் கொள்ளைக்காரனுமேயன்றி மற்றபடி யார்? யோ.10:1. இவர்களுடைய ஜெப வீடு ஒரு கள்ளர் குகையாக இருக்கிறது.எரே.7:11. கள்ளருடைய குகைகளில் செல்வமுண்டு. யோபு 12:6. ஆனால் நான் உங்களுடையதையல்ல. உங்களையே தேடுகிறேன் என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறான். 2கொரி.12:14. என்னிடத்தில் உள்ள தேவனுடைய மந்தையை உற்சாக மனதோடு, மனப்பூர்வமாக, சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவனாக அல்ல, மந்தைக்கு மாதிரியாக கண்காணிப்புச் செய்கிறேன் என்கிறான் அப்போஸ்தலனாகிய பேதுரு. 1பேது.5:2&3. ஒருவனுடைய

வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் நான் இச்சிக்கவில்லை. எனக்கும்என்னுடனேகூட இருக்கிறவர்களுக்கும், வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது. வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை முன்மாதிரியாக கொண்டுள்ளேன் என்கிறான் அப்போஸ்தலனாகிய பவுல். அப்.20:33-35. இவ்வாறாக இன்று உங்கள் பாஸ்டர்கள் ஊழியம் செய்கிறார்களா? உங்களுடைய பாஸ்டர்களைச் சோதித்துப் பார்த்து அவர்கள் யார் என்று உங்களால் அடையாளம் புரிந்துகொள்ள முடிகிறதா? ஒன்று உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரன், அல்லது கள்ள கபடமுள்ள வேலையாள். அவர்கள் இந்த இரண்டில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் உத்தமமும் உண்மையுமான, அதே நேரத்தில் கள்ள கபடமுள்ள வேலையாளாகவும் இருக்க முடியாது.

45. பிரசங்கபீடத்தில் நின்று கொண்டு ஊழியத்திற்கு கார் வேண்டும், தனக்கு வெளிநாடுகள் சென்று சுற்றிப்பார்த்து வரவேண்டும் என்ற ஆசையை உள்ளத்தில் கொண்டு, அதை ஊழிய அழைப்பின் பேரில் வெளிநாடு செல்ல இருக்கிறேன் எனக்கூறி சுயநலத்திற்காக மக்களிடம் தசமபாகம் மற்றும் காணிக்கைகளை வசூல் செய்கிறவன் யார்? அவன் கூலிக்கு மாரடிக்கிற கூலியாளேயன்றி வேறு யார்? விசுவாசிகளின் தசமபாகம், காணிக்கையைக் கொண்டு தனக்கு வசதியான வீடு கட்டிக்கொள்ளுகிறவன். சபைக் கட்டிடம் என்பதன் பேரில் அசையா சொத்துக்களைச் சேகரித்து தன் பெயரில் தக்க வைத்துக்கொள்ளுகிறவன் யார்? இவனும் கள்ளனும், திருடனுமே! இங்கு நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா?

46. சகோ. காலேப் யோசுவாவைக் குறித்து பண விஷயத்தில் குற்றம் சாட்டுகிறவர்களை மீண்டும் எச்சரித்து இங்கு எழுத நிர்பந்தப்படுத்தப்பட்டுள்ளேன். என் ஊழியம் ஒரு திறந்த புஸ்தகமே. அதில் மறைவான வருமானங்கள் எதுவும் இல்லை. எனது ஊழியப்பாதையில் நான் பெற்ற பண உதவிகளைப் பற்றி ஏற்கனவே எழுதியுள்ளேன். அதில் சிறுசிறு தொகை ரூ.100/- ரூ.200/- என்றுப் பெற்றதை எழுதவில்லை. நான் என் ஊழியத்தில் பெற்ற உதவிகள், காணிக்கைகளுக்கு அதிகமாகவே செலவு செய்திருக்கிறேன். VOG மற்றும் WBGNS தவிர தனி நபர்கள் தங்கள் ஊழியத்தின் பாதையில் என்னைப்போல் யாரும் இக்காலத்திற்குரிய தீர்க்கதரிசியின் செய்திப் புத்தகத்தை மக்களிடம் எடுத்துச் சென்றிருக்க மாட்டார்கள். நிறைய செய்திப் புத்தகங்களை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சென்றிருக்கிறேன்.

47. 1978 முதல் இன்று வரை புத்தக வடிவில் உள்ள இக்காலத்திற்குரிய செய்தியை ஸ்தாபன சபை மக்களுக்கு விநியோகம் செய்து தேவனுடைய மந்தையில் உள்ள அந்தக் கடைசி ஆடு இக்காலத்துக்குரிய செய்தியின் சத்தத்தைக் கேட்டு மந்தையில் வந்து சேர அதற்காக நான் பிரயாசப்பட்டு வருகிறேன். அந்தக் கடைசி ஆடு என் ஊழியத்தில் காணப்பட வேண்டும் என்ற வாஞ்சை எனக்கு உண்டு. இந்நாட்களில் நான் அனுப்பும் சில புத்தக பார்சல்கள் ஏதோ ஒரு காரியத்தின் நிமித்தம் எனக்குத் திருப்பி அனுப்பப் படுவதற்கு பதிலாக புத்தகத்தின் பின்பகுதியில் கொட்டை எழுத்தில் பிரிண்ட செய்யப்பட்டுள்ள WBGNS விலாசத்திற்கு திருப்பி அனுப்பப்படுவதாக கூறினார்கள். இது போஸ்ட் ஆபிஸில் நடக்கும் தவறுகள். நான் ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் WBGNS சென்றிருந்தேன். அப்பொழுது அங்குள்ள சகோ.டேவிட் என்னைக் கடிந்து கொள்ள ஆரம்பித்தார். நீங்கள் பிறருக்குச் செய்திப் புத்தகங்களை அனுப்பும்பொழுது எங்களைப் போன்று நன்கு பேக் பண்ணி அனுப்புங்கள். ஏனோ தானோ என்று பேக் பண்ணி அனுப்பாதீர்கள். நீங்கள் அனுப்பிய சில புத்தக பார்சல்கள் எங்களிடம் திரும்பி வருகிறது. உங்கள் விலாசம் முத்திரையிடப்பட்டுள்ள புத்தகங்களை நாங்கள் விநியோகிப்பதில்லை. இவ்வண்ணமாக புத்தகங்கள் திரும்பி வருவதினால் எங்களுக்கு வேலைப்பளுகள் அதிகரிக்கிறது. ஆதலால் புத்தகங்களை ஒழுங்காக பேக் பண்ணி அனுப்புங்கள். மற்றபடி யாருக்கும் அனுப்பாதீர்கள் என்று கூறி என்னைக் கடிந்து கொண்டார். சகோ.மோசஸ் தயானந்தம் வாயிலிருந்து ஓரிரு வார்த்தைகளே வெளி வந்தது. ஆனால் சகோ.டேவிட் வாயிலிருந்து வார்த்தைகள் சரளமாக வெளியே வந்து கொண்டே இருந்தது. இது அவருக்கு நல்லதல்ல. கொஞ்சம் கட்டுப்பாடு தேவை. இவருடன் பணிசெய்யும் இதர சகோதரர்கள் அடக்கமுள்ளவர்கள். தங்கள் வாயைத் திறப்பதில்லை. ஆனால் இவர் மட்டும் தன்னை ரொம்ப அலட்டிக்கொள்கிறார்.

48. என்னுடைய சில பார்சல்கள் அவர்களுக்குத் திரும்பி வருவதினால் அவருடைய வேலைப்பளு அதிகரிக்கிறதாம். மேலும் அவர்கள் வேலைப்பளு அதிகமாக இருப்பதினிமித்தமாக சம்பளம் கூட்டிக் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் கூறினார். சகோ.டேவிட் மற்றும் WBGNS நிர்வாகத்திற்கும் எழுதுகிறதாவது: இவர் இன்று பெறும் சம்பளமும், இதர சலுகைகளும் இவருக்கு போதுமானதாக இல்லையென்றால் தன் பணிகளை விட்டு விலகி, நமது சபைகளில் உள்ள வேலையில்லா சகோதரர்களுக்கு அந்தப் பணிகளைக் கொடுக்கலாம். சகோ.டேவிட் அவர்களே உங்களுக்கு மனதைரியம் இருந்தால் உடனே உங்கள் பணிகளை ராஜினாமா செய்து விட்டு வெளியேறி நீங்கள் மானம் உள்ளவர் என்பதை நிரூபித்துக்காட்டுங்கள். இன்று உங்கள் பணிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிக அதிகம் அதிகம். நீங்கள் செய்கிற வேலைகளைச் செய்ய அதிகப்பட்ச சம்பளம் ரூ.1,500/-தான். ஆனால் நீங்கள் பல மடங்கு அதிக சம்பளம் வாங்கி ஏழை எளிய மக்களது தசமபாகம் காணிக்கைகளை கொள்ளையடிக்கிறீர்கள்.

49. மேலும் அடிக்கடி செய்தித் தொகுப்புகள் எழுதி வருகிறேன். இதற்கெல்லாம் எனக்கு ஒரு பெரிய தொகை செலவு ஆகத்தான் செய்கிறது. சமீப நாட்களில் வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய இயேசு கிறிஸ்துவின் தூதன் திஸ்பியனாகிய எலியா தீர்க்கதரிசி என்ற செய்தித் தொகுப்பை எழுதி வெளியிட்டேன். இந்த செய்தித் தொகுப்பை வெளியிட ஆறு மாதங்கள் மிகப் பாரப்பட்டதுண்டு. இதனால் எனக்கு ரூ.10,000/-க்கு மேல் செலவு. இந்தச் செய்தித்தொகுப்புக்கு யாரும் இதுவரை எனக்கு மறுப்பு தெரிவித்து எழுதவில்லை. அதுகுறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். பலர் என்னிடம் சகோதரனே, திஸ்பியனாகிய எலியா தீர்க்கதரிசி என்பதற்கு தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் இணைத்து எழுதியுள்ளீர்கள், நிச்சயமாக இதற்கு யாரும் மறுப்பு தெரிவிக்க முடியாது எனக்கூறி, அந்தச் செய்தித் தொகுப்பு தங்களுக்கு மிக்கப் பிரயோஜனமாக இருந்தது என்று நேரில் என்னிடம் கூறினார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவ விவாகம் மற்றும் விவாகரத்து என்ற புத்தகம் வெளியிட்டேன. அதற்கு மட்டுமே எனக்கு ரூ. 25,000/-க்கு மேல் செலவு ஆனது.

50. பிரியமானவர்களே, இவ்வாறாக என் ஊழியத்தின் பாதையில் எனக்கு வந்த வருமானத்தை விட செலவுகளே அதிகம் அதிகம். ஒரு உதாரணத்தை இங்கு கூறுகிறேன். இன்று எனக்கு ரூ.10,000/- என் சொந்த தேவைகளுக்காக தேவைப்படுகிறது. சகோ.யோவேல் பரமானந்தத்தை நாடுகிறேன். அவர் உதவி செய்கிறார். ஆனால் அதற்கு ஈடான தொகையை இதர சமயங்களில் என் கைகளில் பண வசதி இருக்கும்பொழுது சிறு சிறு தொகையாக அவ்வப்போது ஊழியங்களுக்காகச் செலவு செய்து விடுகிறேன். இதுதான் காரியம். ஆக ஏறக்குறை 1978 முதல் இதுவரை எனக்கு ஊழியத்தின் பாதையில் கிடைத்த பணத்தைக் கொண்டு நான் எனக்கு ஒரு அடி நிலம் வாங்கினதுமில்லை, அதில் ஒரு குடிசையை கட்டியதும் இல்லை. உங்கள் காணிக்கைகளைக்கொண்டு அடி ஆட்களுக்கு (பாஸ்டர்களுக்கு காவலர்கள்) சோறு போட்டு ஒரு கும்பலை எனக்கு பக்கவாத்தியங்கள் வாசிக்க தயார் செய்து வைக்கவும் இல்லை. இன்று அநேக பாஸ்டர்கள் கர்த்தருக்குரிய, ஐந்து வகை ஊழியங்களுக்குரிய தசமபாகத்தைக்கொண்டு மற்றும் காணிக்கைகளைக்கொண்டுதான் தங்களுக்கு ஆட்களைச் சேர்த்து தக்க வைத்துக் கொள்கிறார்கள். சாப்பாடு போட்டு அல்லேலூயா போட ஆட்களை வைத்துள்ளார்கள். வீட்டுக்கு வாடகை கொடுத்து ஆட்களைத் திரட்டுகிறார்கள். பணம் கொடுத்து பிறனுடைய மந்தையிலிருந்து ஆடுகளை திருடுகிறார்கள். பிள்ளைகள் படிப்புக்கு பணம் கொடுத்து ஆட்களை ஆதாயப்படுத்துகிறார்கள். சிறுசிறு தொகை அவ்வப்போது கொடுத்து இப்பிரபஞ்சத்திற்குரிய மக்களை வசீகரிக்கிறார்கள். இவ்வண்ணமாக கர்த்தருக்குரிய தசமபாகத்தை உலக மக்களுக்காக செலவிட்டு அவர்களைக் கொண்டு தங்கள் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள். இதுதான் இன்றைய ஊழியம். இந்த நயவஞ்சக ஊழியத்தை என் ஜனங்கள் காண கர்த்தாவே இவர்களுடைய கண்களைத் திறக்கமாட்டீரோ?

51. நான் எனக்கென்று உங்கள் காணிக்கைப் பணத்தில் ஒரு சைக்கில் கூட வாங்கினது இல்லை. என்னுடைய கையெழுத்து மிக மோசமாக இருக்கிறது, படிக்க முடியவில்லையென பலர் வருத்தப்படுவதுண்டு. சகோ.ஜோசப் பிரன்காம் கூட எனது கையெழுத்து புரியவேயில்லை, மறுபடியும் நன்கு தெளிவாக எழுதுங்கள் என்றெழுதினார். சுகோதரனே எனக்கு ஒரு தட்டெழுத்து இயந்திரம் வாங்க ரூ.4,000/- கொடுங்கள் என எழுதினேன் ஊழியக்காரர்களுக்கு உதவிகள் செய்வது தனது பணியின் நோக்கமல்ல. மாறாக செய்திப் புத்தகங்கள் வெளியிடுவது மட்டுமே அவரது ஊழியம் எனக் கூறிவிட்டார். என்னுடைய பெண் பிள்ளைகளும் எனது மனைவியும் கட்டும் சேலைகள் என் உடன் பிறந்த சகோதரியின் மகள்கள் இருவரும் அவ்வப்போது கொடுத்து அனுப்பும் பழைய சேலைகள்தான். நான் போடும் துணி மணிகள் எனது மூத்த சகோதரன் மகன்கள் இருவரும் மற்றும் உறவினர்கள் தரும் பழைய துணிகளே. நான் ஊழியத்தில் வந்தபோது என் ஆஸ்தி எதுவோ அதுவே இதுவரை என்னிடம் உள்ளது. ஆனால் நான் ஊழியத்தில் வந்தபோது எனக்கு 5 பைசா கூட கடன் இல்லை. ஆனால் இன்று வங்கிகளுக்கு பல லட்சங்கள் நான் பெற்றக் கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும். மேலும் நம்முடைய சில சகோதரர்களிடமும் கடன் பட்டிருக்கிறேன்.

52. நான் ஸ்ரீவைகுண்டம் வந்து தங்கிய நாட்களில் ஒரு சிறு தொழிலை செய்ய தமிழ்நாடு தொழில் முதலீடு கழகத்தில் மெஷினெரிகள் வாங்க ரூ.35,000/- கடன் பெற்றேன். நாசரேத் கூட்டுறவு வங்கியில் பயன்படும் மூலதனத்திற்காக (Working capital) ரூ.96,000/- கடன் கேட்டேன். முதலில் ரூ.25,000/-மும் அதன்பின் ரூ.15,000/-மும் ஆக மொத்தம் ரூ.40,000/- கொடுத்தார்கள். வங்கியில் உட்பூசல் எழுந்தது. வங்கி செயலாளர் மற்றும் வங்கி இயக்குனர்களுக்கிடையே நடந்த பூசல்களினால் வங்கி இருகுருப்பாக செயல்பட ஆரம்பித்தது. ஒரு குருப் மற்ற குருப்பை நசுக்க ஆரம்பித்தது. எனக்கு இந்த குருப்பீசத்தில் ஈடுபாடு இல்லாவிட்டாலும் செயலாளர் குருப்பைச் சார்ந்தவன் என்று ஓரம் கட்டப்பட்டேன். ஏனென்றால் வங்கியின் செயலாளரும் அவர் அழைக்கப்பட்ட அழைப்பின்படி கர்த்தருக்கென்று ஒரு ஊழியத்தை செய்து வந்தார். எனக்குத் தரவேண்டிய மீதி பணம் கொடுக்கப்படவில்லை. தொழில் ஸ்தம்பித்தது. தொழிலை புதுப்பிக்க நான் எடுத்த பிரயாசங்கள் ஒன்றும் பலனளிக்கவில்லை. முடிவில் இரு நிதி நிறுவனங்களையும் சந்தித்து வாங்கிய கடனுக்கு தனிவட்டி போட்டு கடன் தொகையைப் பெற்று என்னைக் கடனிலிருந்து விடுவிக்கும்படி கேட்டேன். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் முன் வந்தது. அவர்கள் கடன் அடைக்கப்பட்டது. நாசரேத் வங்கி முன் வரவில்லை. ஆதலால் பிரச்சனைகள் உருவாகியது. ஏனென்றால் எனது தொழிலை பாழாக்கியதே அவர்கள்தான். இந்தப் பிரச்சனையினால் பலமுறை நீதிமன்றங்கள் செல்ல வேண்டியதாயிற்று. மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சென்னை சென்று நீதிமன்றங்களில் நீதிக்காக அலைந்தேன். கீழ்நீதிமன்றங்களில் வங்கிக்கு சாதகமாகவே தீர்ப்புகள் இருந்தது. சென்னை, உயர்நீதிமன்றத்தில் எனக்கு சாதகமாகவே எப்பொழுதும் தீர்ப்புகள் கிடைத்துக்கொண்டிருந்தது. இந்நாட்களில் முடிவு கட்டத்திற்கு வழக்கு வந்தது. எதிர்பார்த்தபடி கீழ் நீதிமன்றத் தீர்ப்பு வங்கிக்குச் சாதகமாகவே இருந்தது. ஆதலால் நான் உயர் நீதிமன்றத்தை நாட வேண்டியவனாக இருக்கிறேன். வங்கி அன்று கொடுத்த ரூ.40,000/-த்தை பல லட்சமாக்கி என் ஆஸ்தியை அபகரிக்க நினைக்கிறார்கள். நான் கர்த்தர் எனக்குக் கொடுத்த பலத்தைக் கொண்டு என் சுதந்தரத்தை தக்க வைக்கப் பிரயாசப்படுகிறேன். நமது சகோதரர்களில் வசதிகள் படைத்த மூவரை அனுகினேன். அவர்கள் உதவி எதுவும் செய்ய முடியாது என்று கூறி விட்டார்கள். அவர்கள் வசதிக்கு நான் கேட்ட ரூ.15,000/- ஒரு பெரிய தொகை இல்லை. ஏனென்றால் அவர்களில் இருவர் பிரதி மாதம் பல லட்சம் வருமானம் உள்ள கோடீஸ்வரர்கள். ஆனால் எனக்கு உதவி செய்ய மனமில்லை. நானும் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று அவர் மீது பாரத்தை வைத்து விட்டு, அவர் வழி நடத்துதலுக்கு என்னை ஒப்புக்கொடுத்து என் போராட்ட வாழ்க்கையை போராடிக்கொண்டு வருகிறேன். அவர் இன்றுவரை வழிநடத்தி வருகிறார். இனியும் வழிநடத்த வல்லவராயிருக்கிறார். ஏனென்றால் அவர் என்னைக் காண்கிற தேவனாயிருக்கிறார். இயேசு கைவிடார்.

53. அடுத்து எனது பிள்ளைகள் படிப்பிற்காக ரூ.1.50,000/- தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் பண உதவிப்பெற்றேன். வருடங்கள் ஐந்தாகி விட்டது. இதை வட்டியுடன் செலுத்த வேண்டும். இது போக தூத்துக்குடியில் உள்ள நமது சகோதரர் ஒருவருக்கு ரூ.10,000/-, தேங்காய் பட்டிணத்தில் உள்ள ஒரு சகோதரனுக்கு ரூ.4,000/-, மதுரையில் உள்ள ஒரு அவிசுவாசி நண்பருக்கு ரூ.10,000/- கொடுக்கவேண்டும். திருச்சியில் உள்ள ஒரு சகோதரனுக்கு ரூ.6,000/, கோவையிலுள்ள ஒரு சகோதரனுக்கு ரூ.1,800/-, சென்னையிலுள்ள ஒரு சகோதரனுக்கு ரூ.3,000/- கொடுக்க வேண்டும். இவர்கள் நம்முடைய சகோதரர்களாக இருந்தாலும் இதை எனக்குக் கடனாகக் கொடுத்ததினால் நான் திருப்பிக் கொடுக்க வேண்டியவனாய் இருக்கிறேன். மேலும் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள ஜெனரல் ஸ்டோருக்கு ரூ.1,000/- கொடுக்க வேண்டும். மேலும்

2004, ஆகஸ்டு மாதத்தில் ரூ.3,000/- கடன்பட்டுவிட்டேன் இதுதான் இன்றைய எனது பொருளாதார நிலை. எனது பையன்கள் இருவரும் தற்பொழுதுதான் வேலைக்கு வந்துள்ளார்கள். நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொழில் எதுவும் செய்யவில்லை. எனக்கு இரத்த அழுத்தத்தினால் மாரடைப்பு (Heart attack) ஏற்பட்டதிலிருந்து தொழில் செய்வதை நிறுத்தி விட்டேன். தற்போது பெண் பிள்ளைகள் மூவரும் படித்து வருகிறார்கள். பிள்ளைகள் படிப்பில் மண்டுகள் தான். குடும்பத்தினுடைய பொருளாதார நிலை தெரியாமல், யாக்.1:5-யை கடைப்பிடிக்காது, எப்படியாவது ஐந்து ஆண்டுகள் படிப்பை பத்து வருடங்களில் முடித்துவிடவேண்டுமென கடினமாக உழைத்து படித்து வருகிறார்கள். சாத்தான் இவர்களைக் கொண்டு அனுதினமும் என்னோடு போராடிவருகிறான். ஆனாலும் மனுஷர்களுடைய கண்களில் தயவு கிடைக்க கர்த்தர் அனுக்கிரகம் செய்ததால் இருவர் மருத்துவக்கல்லூரிகளிலும், கடைசிப் பெண் நடுநிலைப் பள்ளியிலும் படித்து வருகிறார்கள். இதனால் பெற்றக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் சிரமப்பட்டு வருகிறேன். ஆனாலும் கர்த்தர் எனக்காக யாவையும் ஏற்ற வேளையில் செய்து முடிப்பார் என்ற விசுவாசத்தில் ஓடிக்கொண்டிருக்கிறேன். 1978 முதல் இன்று வரை என் பெயரில், எனது மனைவி பெயரில், என் பிள்ளைகள் பெயரில் எங்கும் எந்தவிதமான சேமிப்பும் கிடையாது. கர்த்தர் எங்களுக்கு அன்றன்றுள்ள ஆகாரத்தை அன்றன்று கொடுத்து போஷித்து வருகிறார். நானும் என் குடும்பத்தினரும் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டோம். கர்த்தர் தம்முடைய வார்த்தையின்படியே, வாக்குத்தத்தங்களின்படியே எங்களைப் போஷித்து, பராமரித்து வழிநடத்திக்கொண்டு வருகிறார். சத்திய ஆவி எங்களை அநுதினமும் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி வருகிறது. இது கிருபை! சுத்த கிருபை!! தேவ கிருபை!!!

54. நான் இவ்வளவு நெருக்கடியான பொருளாதார நிலையில் இருந்துகொண்டு கர்த்தர் எனக்குக் கொடுத்த ஊழியத்தை அவர் பார்வைக்கு திருப்திகரமாக செய்து வருகிறேன் என்ற நம்பிக்கையில் ஓடிக்கொண்டிருக்கையில் 2004, ஜீன் மாதம் வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் சபையைச் சார்ந்த சிலர் எனக்கு சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒரு கோடீஸ்வரர் சகோ.தேவநேசன் பணத்தை அவரது வீட்டில் யாரும் அறியா வண்ணம் எனக்கு அள்ளி அள்ளி கொடுக்கிறார் என்று அவருடைய பெற்றோரிடம் சென்று குறை கூற அது எனக்கும் அவருக்கும் மிக்க மனக்கஷ்டத்தைக் கொண்டு வந்தது. கல்வாரி சபைக்கு என் மீது ஏன் இத்தனை கோபம்? நான் சகோ.தேவநேசனுக்கு அவ்வப்போது ஆவிக்குரிய ஆலோசனைகள் கொடுத்து அவரைக் கொண்டு பாஸ்டர் சாமுவேலை எதிர்த்து வருகிறேன் என்பது அவர்களுடைய யூகம். ஆனால் உண்மையிலே சகோ.தேவநேசனுக்கும் அவரது பாஸ்டருக்கும் இடையில் உள்ள உறவுகளில் நான் தலையிடுவதே கிடையாது. அவர் தேவனுடைய வார்த்தையில், இக்காலத்திற்குரிய செய்தியில் கேட்கும் கேள்விகளுக்கு அவ்வப்போது பதிலைக்கொடுத்து அவரைச் செய்தியில் உற்சாகப்படுத்தி வருகிறேன். அவ்வளவுதான் அவரோடு என் உறவு.

55. சகோ.தேவநேசனை மாதத்திற்கு ஓரிரு முறை சந்திக்கிறேன். சந்திப்பின் முடிவில் அவரது வியாபார ஸ்தலத்தில் ஒரு மறைவான இடத்தில் என்னை அழைத்து, அவரது கடையில் வேலை செய்யும் ஒரு சிறுவனையும் அழைத்து, அவர்கள் இருவருக்காகவும் ஜெபிக்கும்படி கேட்பார். இதை இவர்கள் ஜெபம் என்ற பெயரில் ஒதுக்கமான இடத்திற்குச் சென்று, அங்கு சகோ.காலேப் யோசுவாவுக்கு சகோ.தேவநேசன் பணத்தை அள்ளிஅள்ளிக் கொடுக்கிறார் எனக்கூறி அவருடைய பெற்றோர்களை எனக்கு விரோதமாக திசைதிருப்பி விட்டுவிட்டார்கள். இதனால் எங்களது சந்திப்பு தடைப்பட்டது. ஆனால் சகோ.தேவநேசன் எனக்குச் செய்து வந்த உதவிகள்தான் என்ன? நான் அவரை சந்திக்கும் வேளையில் சென்னையில் திறந்த வெளியில் விற்கும் சைவ மினி சாப்பாடு ஒன்று சாப்பிட ரூ.10/- மற்றும் ஒரு ஆம்லெட்க்காக ரூ.4/- ஆக எனது கையில் ரூ.15/- கொடுத்து சாப்பிட்டு விட்டு வரும்படி கூறுவார். அடுத்து எனக்கு ஒரு டீ அல்லது ஒரு எலுமிச்சை சர்ப்பத் வாங்கிக் கொடுப்பார். டீ ரூ.2/-, சர்ப்பத் ரூ.3/- என நினைக்கிறேன். அடுத்து நான் அவரை விட்டு பிரியும்போது 200 கிராம் வறுத்த வேர்க்கடலை கொடுப்பார். அது ரூ.10/- என நினைக்கிறேன். ஆக நான் அவரைச் சந்திக்கும் வேளைகளில் அவர் எனக்காகச் செய்யும் செலவு ரூ.28/- மட்டுமே. காணிக்கை என 5பைசா கூட கொடுக்க மாட்டார். இப்பொழுது நான் இவரிடம் வந்து செல்ல எனக்கு ரூ.16/-லிருந்து ரூ.18/-வரை செலவு ஆகும். ஆக அவர் மூலமாக எனக்கு வரவு 200 கிராம் வேர்க்கடலை மட்டும்தான். இதைத்தான் இவர்கள் சகோ.தேவநேசன் சகோ.காலேப் யோசுவாவிற்கு அள்ளிஅள்ளிக் கொடுத்து அவரது குடும்ப ஆஸ்தியை அழிக்கிறார் என்கிறார்கள். தாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி எனக்கூறிக் கொண்டு இப்படி புரளி கிளப்பும் இவர்களுக்கு இது வெட்கம். இவர்களை விட விக்கிரக ஆராதனைக்காரன் மேல். அவன் ஒரு கல்லை வணங்கினாலும் அவனது உள்ளத்தில் தெய்வபயம் உண்டு. ஆனால் இவர்களிடம் தெய்வபயம் என்பதே கிடையாது. இவர்கள் சிந்தைகள் யாவும் துர்சிந்தைகள்.

56. இங்கு மேலும் ஒரு சம்பவத்தை எழுத வாஞ்சிக்கிறேன். ஒருமுறை எனது வீட்டில் மளிகைச்சாமான்கள் தட்டுப்பாடு. வாங்கப்பண வசதிகள் இல்லை. பூவிருந்தவல்லியில் எல்லாமே அவ்வப்போது ரொக்கப்பணம் கொடுத்தே வாங்கி வருகிறேன். இந்நிலையில் சகோ.தேவநேசனிடம் சென்று அவரது மளிகைக்கடையில் இருந்து எனக்குக் கடனாக ரூ.200/- முதல் ரூ.300/- வரை மளிகைச்சாமான்கள் கேட்டேன். பணத்தை மகன் சம்பளம் வாங்கிய உடன் கொடுப்பதாகக் கூறினேன். அதற்கு அவர் சகோதரரே இந்த உறவு நமக்குள் வேண்டாம் எனக்கூறி விட்டார். ஆனால் கர்த்தர் என் தேவைகளை அப்பொழுது ஒரு அவிசுவாசி மூலம் சந்தித்தார். இந்நிலையில் கூட நான் சகோதரனிடம் கிறிஸ்துவின் அன்பினிமித்தமாக, தேவனுடைய வார்த்தையினிமித்தமாக, இக்காலத்திற்குரிய செய்தியின் நிமித்தமாக பழகி வந்தேன். இந்தச் சகோதரனுக்கு தான் சத்தியத்தின்படி நடக்க வேண்டும், பிறருக்கு சத்தியத்தை எடுத்துக்கூற வேண்டும், மாய்மாலம் பண்ணுகிறவர்களை கண்டிக்க வேண்டும், சபையில் பாஸ்டர் வணக்கம், பிரன்காம் வணக்கம் கூடாது போன்ற நல்ல எண்ணங்கள் உண்டு. இதனால் நான் அவரிடம் ஐக்கியம் கொண்டுள்ளேன். ஆனால் அவர்கள் என்னிடமிருந்து அவரைப் பிரித்து, அவரைத் தனிமையாக்கி, பின் பாஸ்டர் சாமுவேலிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட தந்திரங்களை கையாளுகிறார்கள். சாத்தானுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாததல்லவே.

57. இவ்வாறாக என் ஊழியத்தில் அன்று முதல் இன்று வரை எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துப்போகிறதில்லை; உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

58. நான் குற்றம் கண்டு பிடிக்கிறேன் என்பதைக் குறித்து மனம் வருந்தவில்லை. ஏனென்றால் அது குற்றம் கண்டுபிடிப்பதற்குரிய காரியமே. நான் யாருடைய உணர்ச்சிகளையும் துன்பப்படுத்த விரும்பவில்லை. ஆனால் தேவனுடைய உணர்ச்சிகளை நான் துன்பப்படுத்துவதைப் பார்க்கிலும் யாராகிலும் ஒரு மனிதனுடைய உணர்ச்சிகளை துன்பப்படுத்துவது பரவாயில்லை என்று எண்ணுகிறேன். (உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து, பாகம் 2, பக்கம் 22, பத்தி 1)

59. முத்தம் என்பது அன்பின் நிமித்தமாக அல்லது மரியாதை நிமித்தமாக ஒரு நபர் தன் வாயின் உதடுகளினால் மற்றொரு நபரின் சரீரத்தில் உள்ள ஏதாவது ஒரு அவயவத்தை முக்கியமாக உதடுகள், கன்னங்கள், கைகள், கழுத்து, கால்களை தொடுவதாகும். மனைவிகள் தங்கள் புருஷருடைய கைகளையும், தாடியையும் முத்தமிடுவதும், ஒருவர் அணிந்திருக்கும் ஆடைகளை முத்தமிடுவதும் பழங்கால வழக்கத்தில் இருந்ததாம். முஸ்லீம் மக்கள் மெக்காவில் உள்ள கருப்புக் கல்லை முத்தமிடுகிறார்கள். முத்தம் என்ற சொல் ஆங்கிலத்தில் Kiss எனவும், எபிரேய பாஷையில் Neshiqah எனவும், கிரேக்க பாஷையில் Philema எனவும் அழைக்கப்படுகிறது.

60. Philema என்ற சொல் கணவன் மனைவி மேல் கொண்டுள்ள அன்பு, மனைவி கணவன் மேல் கொண்டுள்ள அன்புக்கு இணையான அன்பைக் குறிக்கும் சொல்லாகும். அதாவது Love to wife. Love to husband. ஆனால் இந்த அன்பின் நிமித்தமாக, நீங்கள் உங்கள் மனைவிக்காக ஒருவனை கொலை கூட செய்ய முடியும். இந்த கிரேக்க பதத்திற்கு ஐக்கியம் (Fellowship)என்ற அர்த்தமும் உண்டு.

61. ஆனால் மற்றொரு அன்பு உண்டு. அது தெய்வீக அன்பு. அது அகாபே (Agape) என்று அழைக்கப்படுகிறது. இது God's love for man. இது ஒரு வழி அன்பு. எந்த நிலைமையிலும், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் காட்டப்படும் அன்பாகும். தெய்வீக அன்பு ஒருவனை ஆட்கொள்ளும்போது உங்கள் மனைவிக்காக நீங்கள் ஒருவனைக் கொலை செய்வதற்குப் பதிலாக அவனுடைய தவறான நடத்தையை தேவன் மன்னிக்கும்படி அவனுக்காகத் ஜெபிக்கச் செய்யும்.

62. உலகப் பிரகாரமான அன்பு ஒருவனை கொலை செய்யத் தூண்டுகிறது. அதே நேரத்தில் தெய்வீக அன்பு அவனுக்காக ஜெபிக்கத் தூண்டுகிறது. இதுதான் இந்த இரு அன்புகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்.

63. திருமண முத்தம் கணவன் மனைவியில் கொண்டுள்ள, மனைவி கணவன் மேல் கொண்டுள்ள அன்புக்கு (Philema) இணையாகும். ஆனால் தேவனுடைய சபையில் காணப்படும் பரிசுத்த முத்தம்/அன்பின் முத்தம் அகாபே அன்பு ஆகும். அது தேவ அன்பு. நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒரிவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே சபைக்கு இயேசு கிறிஸ்துவினுடைய கட்டளை. ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும், அதிகமான அன்பு ஒருவனிடத்திலும் இல்லை. யோ.15:12&13. திருமண முத்தம் உலகப்பிரகாரமான அன்பு ஆகும். அதே நேரத்தில் பரிசுத்த முத்தம் தெய்வீக அன்பு ஆகும். தேவனுடைய சபையில் உலகப்பிரகாரமான அன்புக்கு இடமே இல்லை. அங்கு தெய்வீக அன்பே எங்கும் வாசனை வீசும். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் உலகப்பிரகாரமான அன்பை தேவனுடைய சபையில் நுழைத்து அநேகருக்கு இடறலாக இருப்பது ஏன்? நலமானதை விட்டுவிட்டு, தவறானதை பற்றிக்கொண்டது ஏன்?

64. தீர்க்கதரிசி தன் ஊழியம் குறித்து இவ்வாறு கூறுகிறார்:
தேவன் எனக்கு அளித்த பங்கு, குழந்தைகளை முத்தமிடுவது, இளைஞர்களுக்கு விவாகம் செய்து வைப்பது, முதிர் வயதினரை அடக்கம் செய்வது போன்றதல்ல. ஆனால் அஞ்ஞான மார்க்கத்தின் வஞ்சனைகள், பேய்களின் உபதேசங்கள் மற்றும் அந்தகாரத்தின் வல்லமைகள் ஆகியவற்றிற்கு எதிரான யுத்தத்தில் இருபுறம் கருக்குள்ள பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையைப் பிடித்துக்கொண்டு, எதிராளியை தோற்கடிப்பதை நான் காணும் வரைக்கும் போராடுகிறதே என் பங்கு. (இடைவெளியில் நின்றல், பத்தி 54) இதுவே ஒவ்வொரு உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனின் பங்கு. ஆனால் நம்முடைய பாஸ்டருக்கு தேவன் அளித்த பங்கு திருமணத்தில் மணமகன் மணமகள் இருவரையும் முத்தமிடவைத்து அதை ரசிப்பதா? இந்த வெட்கக்கேட்டை என்னவென்று சொல்வது?

65. சென்னை சபையில் உபதேசிக்கப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வரும் திருமண முத்தம் குறித்து சபை பாஸ்டருடன் நான் பேசியபோது எனக்கு முற்றிலுமாக அவருடன் ஒருமனப்பாடு இல்லை என்று கூற அவர் தன் நிலையைக் கூறி, அதுகுறித்து மீண்டும் தியானிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்.

66. நான் அது குறித்து தியானிக்க ஆரம்பித்த போது அவர் கூறிய சில கருத்துக்கள் தீர்க்கதரிசியின் செய்தி விநோதமானவன்(OddBall), பத்தி 50&52ல் இருப்பதையும், அவைகள் தவறாக அவரால் புரிந்துக்கொள்ளப்பட்டதையும் கண்டேன். இந்தப் பத்திகளை உங்களுக்கு இங்கு எடுத்து எழுதுகிறேன். பத்தி 50: உண்பதற்காக அன்றொரு இரவு ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு இளைஞர்களும், இளம் பெண்களும் தங்கள் விருப்பப்படி கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருந்தனர். என் தங்கையே, அது மறைவான விபசாரம் என்று உனக்குத் தெரியுமா? ஒரு இளைஞன் உன்னை முத்தம் செய்யும்போது, அவன் ஏற்கனவே உன்னுடன் விபசாரம் செய்தாயிற்று. உனக்கு அவனுடன் கல்யாணம் ஆகும்வரைக்கும் அவன் உன்னை முத்தம் செய்ய நீ அனுமதிக்கக் கூடாது. ஏனென்றால் சுரப்பிகள் - ஆண் சுரப்பிகள், பெண் சுரப்பிகள் இரண்டுமே உதடுகளில் உள்ளன. உங்களுக்குப் புரிகிறதா? ஆண் சுரப்பிகளும், பெண் சுரப்பிகளும் ஒன்று சேரும் போது, அது எங்கிருந்த போதிலும் நீங்கள் மறைவான விபசாரத்தில் ஈடுபடுகிறீர்கள். உன் முகத்திலிருந்த அந்தத் திரை தூக்கப்பட்டு நீ அவன் மனைவியாகும் வரைக்கும், அவன்

உன்னை முத்தமிட அனுமதிக்கக்கூடாது. அப்படிச் செய்யாதே! அது விபசாரம் செய்தல். அது ஆண் சுரப்பிகளும், பெண் சுரப்பிகளும் ஒன்றாகக் கலத்தல்.
பத்தி 51: ஏன் ஒரு ஆண் மற்றொரு ஆணை, ஒரு பெண் மற்றொரு பெண்ணை உதடுகளில் முத்தமிடுவது இல்லை? ஏனென்றால் சுரப்பிகள் ஒன்றொடொன்று இனம் கலவாது. சுரப்பிகளின் இனக்கலப்பினால் குழந்தைகள் பிறக்கின்றன. எனவே அது எங்குப் பார்த்தாலும் ஏறக்குறைய பகீரங்க விபசாரமாக உள்ளது. திரைப்படங்களையும், மற்ற எல்லாவற்றையும் பாருங்கள். இப்படிப்பட்ட செயல்களையே நீங்கள் காணலாம். நடத்தைக்கெட்ட தன்மை அதிகரித்துக்கொண்டே வருவதில் வியப்பொன்றுமில்லை. அந்தப்பெண்களை உதடுகளில் முத்தமிடுவது விபசாரம் என்றும், அவர்கள் மனந்திரும்பாமல் போனால் தேவன் அவர்களை மன்னிக்கமாட்டார் என்றும் அறிந்த பிறகும் அவர்கள் எப்படி அதை அலட்சியப்படுத்தி அதையே திரும்பத்திரும்ப செய்ய முடியும்?

67. இங்கு நாம் கற்றுக்கொள்வதென்ன? ஒரு ஆண் தன் மனைவியில்லாத மற்றொரு பெண்ணை, அல்லது ஒரு பெண் தன் கணவனல்லாத மற்றொரு மனிதனை தன் உதடுகளினால் அடுத்தவனுடைய உதடுகளில் முத்தம் செய்வது தவறு. அது விபசாரம். ஏனென்றால் ஆண், பெண் சுரப்பிகள் இரண்டும் உதடுகளில் உள்ளது. ஆண், பெண் சுரப்பிகள் ஒன்று சேரும்போது நீங்கள் மறைவான விபசாரத்தில் ஈடுபடுகிறீர்கள். ஒரு ஆண் மற்றொரு ஆணையும் அல்லது ஒரு பெண் மற்றொரு பெண்ணையும் உதடுகளில் முத்தமிடுவது இல்லை. ஏனென்றால் சுரப்பிகள் ஒன்றோடொன்று இனம் கலக்காது. ஆனாலும் அவ்வாறாக அவர்கள் முத்தமிடுவார்களாகில் அது ஓரினச்சேர்க்கை விபரீதமாகும் என்கிறார்.

68. அடுத்து என் தங்கையே, உன் முகத்திலிருக்கிற அந்தத் திரை தூக்கப்பட்டு நீ அவன் மனைவியாகும் வரைக்கும், அவன் உன்னை முத்தமிட அனுமதிக்கக்கூடாது. அப்படிச் செய்யாதே! அது விபசாரம் செய்தல் ஆகும்! அது ஆண் சுரப்பிகளும், பெண் சுரப்பிகளும் ஒன்றாகக் கலத்தல் என்கிறார். You should n't let a boy kiss you untill that veil is raised on your face and you are his wife. அவள் முகத்தில் என்ன முக்காடு இருக்கிறது? திருமண வேளையில் அவள் அணிந்துள்ள வெள்ளை நிறவெயில் (veil) அல்ல அது. வெயில் (veil) அணிவது கூட ஒரு சர்ச்சைக்குரிய காரியமாக இருக்கிறது. ஏற்ற வேளை வரும்பொழுது நாம் அது குறித்து தியானிக்கலாம். இங்கு சகோ.பிரன்காம் வெயில் (veil) என்று கூறுவது அவளுடைய கன்னிகை என்ற முக்காடு ஆகும். அந்தக் கன்னிகை என்ற முக்காடு தூக்கப்பட்டு, அவள் ஒருவனுடைய மனைவி ஆகும்வரை, அவன் உன்னை முத்தமிட அனுமதிக்காதே என்கிறார். அவள் ஒருவனுடைய மனைவி ஆகும்போதுதான் அவளுடைய முகத்தில் உள்ள கன்னிகை என்ற முக்காடு தூக்கப்படுகிறது.

69. நீங்கள் ஒரு பெண்ணை முத்தம் செய்யலாம். ஆனால் அது உங்கள் மனைவியாக இருக்க வேண்டும். நீங்கள் எவ்வளவு பரிசுத்தமாக இருந்தாலும், இன்னும் ஒரு மனிதனே. நீங்கள் எவ்வளவுதான் பரிசுத்தமாக இருந்தாலும் இன்னும் ஒரு ஸ்தீரியே. ஆதலால் விவாகம் ஆகும் வரைக்கும் அவன் அவளை முத்தமிடக்கூடாது. இது குறித்து மேலும் நீங்கள் கே.ப. 156ஐ தியானிக்கலாம்.

70. சகோ.பிரன்காம் 1.12.1963, 16.1.1965 மற்றும் 20.2.1965 ஆகிய மூன்று நாட்களில் மூன்று இடங்களில் மூன்று திருமண ஆராதனைகளை நடத்தி வைக்கிறார். ஆராதனை முடிவில் அவர்கள் திருமணம் ஆனவர்கள் என்ற அறிவிப்பு திருமணம் நடத்துபவரால் அறிவிக்கப்பட்டவுடன்அவர் நாட்டு வழக்கப்படி அங்கு மணமகன், மணமகள் ஒருவரையொருவர் முத்தமிடுகிறார்கள். ஆண், பெண் ஒருவரையொருவர் எங்கும் கட்டிப்பிடித்து முத்தமிடுவது அவர்கள் நாட்டுக் கலாச்சாரம். ஏனென்றால் அமெரிக்கா ஒரு விபசார நாடு என்பதை தீர்க்கதரிசியே கூறுகிறார். நமது பாஸ்டர் அந்த விபசார நாடு கலாச்சாரத்தை, நம் நாட்டில் இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்கள் மத்தியில் நுழைக்கிறார். இது முரண்பாட்டின் விதை. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளால் தேவனுடைய சபைக்கு ஒப்புவிக்கப்பட்ட மூல உபதேச சட்டங்களுடன் ஒன்றை இணைக்க, ஒன்றைக் குறைக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. தேவனுடைய சபையில் திருமண முத்தத்தை ஒரு உபதேசச்சட்டமாக கொண்டுவர பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருக்கு அதிகாரம் எங்கிருந்து வந்தது? இவர் மந்தையை இறுமாப்பாய் ஆளுகை செய்யக்கூடாது.

71. சகோ.பிரன்காம் நடத்திய திருமண ஆராதனை இக்காலத்திற்குரிய ஒரு செய்தி அல்ல. மேலும் திருமண முத்தத்தை அவர் ஒரு உபதேசமாக தேவனுடைய சபைக்குள் கொண்டு வரவில்லை. வேதத்தில் இல்லாத ஒன்றை, ஒரு புது உபதேசமாக தேவனுடைய சபைக்குள் ஏழாம் சபைக்காலத்தூதன் கொண்டு வரமுடியாது. கடந்த ஆறு சபைக்காலங்களிலும் வெளிப்படுத்தப்படாத தேவ இரகசியங்களை வெளிப்படுத்தி, மணவாட்டியை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துவதே இவரது பணி. ஆனாலும் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு இவர் முன்னோடி அல்ல. இவர் கொண்டு வந்த செய்தியே முன்னோடி. இன்று இவர் நம் மத்தியில் இல்லை. ஆனால் இவர் கொண்டு வந்த செய்தி நம் மத்தியில் ஜீவித்திருந்து, முன்னோடியாக இருந்து மணவாட்டியை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறது. திருமண முத்தம் வேதத்தில் இல்லாத ஒரு உபதேசம். ஆதலால் இதை யாரும் ஒரு உபதேசமாக தேவனுடைய சபைக்குள் கொண்டு வரமுடியாது. எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளோடு எதையாகிலும் ஒன்றை ஒருவன் கூட்டக்கூடாது. அவ்வாறு கூட்டினால் தேவன் அவனுடைய பங்கை ஜீவபுஸ்தகத்திலிருந்து எடுத்துப் போடுவார். ஆதலால் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டிச்சேர்க்காதீர்கள் என்று உங்களை எச்சரிக்கிறேன்.

72. சபைக்குள் ஒன்றை உபதேசமாகக் கொண்டு வந்தால் அதற்கு வேதவசனம் ஆதாரமாக இருக்கவேண்டும் திருமண முத்தத்திற்கு தேவனுடைய வார்த்தையில் எங்கும் ஆதாரம் இல்லை. உதாரணமாகப் பாருங்கள், ஸ்திரீகள் தங்கள் தலைமயிருக்கு சாயம் போடுவது குறித்து கேள்வி எழுந்தபோது தீர்க்கதரிசி இதற்கு விரோதமாக வேதவசனம் எதுவும் எனக்கு இல்லை, நான் தேவனுடைய வசனத்தில் மட்டுமே நிலைக்கொண்டிருக்கவேண்டும். பார்? அவ்விதம் அவர்கள் செய்யக்கூடாது என்று வேதம் உரைக்கவில்லை. ஆனால் அவள் நீண்ட தலைமயிரை உடையவளாயிருக்கவேண்டும் என்று வேதம் போதிக்கிறது. ஆம், பிரியமானவர்களே, தேவனுடைய சபையில் உபதேசமாகக் கொண்டுவருவதற்கு வேதவாக்கியம் ஆதாரமாகவேண்டும். நமது பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் திருமண முத்தத்திற்கு ஆதாரமாக வேத வசனத்தை

காட்டமுடியுமா? ஒருக்காலும் முடியாது. திருமணமுத்தம் தேவனுடைய சபையில் ஒரு மனுஷனுடைய உபதேசம், போதனை. அதற்கு நாம் கீழ்ப்படியத் தேவையில்லை. இதுக் குறித்து கே.ப 250, பத்தி 167-யை தியானியுங்கள்.

73. பரிசுத்த வேதாகமத்தில் திருமண ஆராதனை, மரித்தவர்கள் அடக்க ஆராதனை போன்ற சம்பவங்களுக்கு எந்தவிதமான ஒழுங்கு முறைமைகள் இல்லை. ஞானஸ்நானத்திற்கு, கால்களை கழுவுதலுக்கு, கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு அவைகள் ஆசரிக்கப்பட வேண்டிய ஒழுங்கு முறைமைகள் உண்டு. ஆனால் திருமண ஆராதனைக்கு எந்த விதமான ஒழுங்கு முறைமைகளும் இல்லை.

74. சகோ.பிரன்காம் ஏழாம் சபைக்கால தூதன், தீர்க்கதரிசி. அதன் அடிப்படையில் அவர் கடைப்பிடிக்கும் ஒழுங்கு முறைமைகளை நாமும் கடைப்பிடிப்பதில் தவறுகள் எதுவும் இல்லை. அது நமக்கு ஆரோக்கியமான வழிநடத்துதல் கூட. ஆனால் திருமண ஆராதனைகளில் ஒருநாட்டுக் கலாச்சாரமும், பண்பாடுகளும் கலந்து காணப்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருவர் மற்றொரு நாட்டின் கலாச்சாரத்தை காப்பியடிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. ஒரு நாட்டின் கலாச்சாரத்தை தேவனுடைய சபைக்குள் உபதேசமாக நுழைப்பது பேய்த்தனத்துக்கடுத்த செயலாகும். நாம் பிசாசுக்கு இடம் கொடுக்க வேண்டாம். சகோ.பிரன்காம் திருமண முத்தத்தை சபைக்கடுத்த உபதேசமாக எங்கும் கொண்டு வரவில்லை.

75. சகோ.பிரன்காம் அவர் நாட்டுக் கலாச்சாரப்படி உணவு உண்கிறார், உடை உடுத்துகிறார். நாம் அதைக் கடைப்பிடிக்க வேண்டியத் தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் உணவு நமக்கு ஜீரணிக்காது. அவர்கள் ஆடைகளை நாம் உடுத்திக் கொண்டு நடக்க முடியாது. கலாச்சாரங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடும். ஆதலால் பிரியமானவர்களே பிரன்காம் வணக்கம், திருமண முத்தம் பிசாசின் வஞ்சனை. இது கொடிய வஞ்சிப்பின் காலம். சென்னை சபை ஒரு வஞ்சிக்கப்பட்ட சபை. பாஸ்டருக்கு அவருடைய இந்த வயதில் திருமண முத்தத்தின் மேல் ஏன் இத்தனை மோகம்? ஒரு இளம் வயதினை உடைய ஆணையும், பெண்ணையும் ஒருவரையொருவர் ஒரு கூட்டம் ஜனங்கள் மத்தியில் முத்தமிட வைத்து, அதைப்பார்த்து ரசிக்க விரும்புகிறாரா? தமிழ்நாட்டில் இதுவரை இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளவர்கள் கண்டிராத, காணக்கூடாத ஒரு வெட்கக்கேடு இந்த திருமண முத்தம்.

76. திருமணச்சடங்கு பற்றி தேவனுடைய வார்த்தை, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் உபதேசங்கள், இக்காலத்திற்குரிய செய்தி விபரமாக ஒன்றும் கூற வில்லை. ஒவ்வொருவரும் அவரவர்கள் நாட்டு பண்பாடு, கலாச்சாரம்படி திருமண ஒழுங்கை கடைப்பிடித்து வருகிறார்கள். திருமண முத்தம் நமது நாட்டு மக்களிடம் மாம்ச இச்சைகளை உருவாக்குகிறது என ஒரு சகோதரன் என்னிடம் கூறினார். அதினால் அவரும் பாதிக்கப்பட்டதாகக் கூறினார். பாருங்கள் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று. மத்.5:28. அவள் இச்சையுண்டாகத்தக்கதாக தன்னைக் காண்பித்தாள். அப்படித்தான் சபையும் உலகத்துடன் நடந்து கொண்டிருக்கிறது. சென்னை சபையும் அப்படித்தான் உலகத்துடன் நடந்து கொண்டிருக்கிறது. திருமண முத்தம் என்ற பெயரில் ஒரு இளம் பெண் ஒரு வாலிப ஆண் சபையில் அமர்ந்திருக்கும் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள், புறமதத்தினர், விக்கிரக ஆராதனைக்காரர்கள் மத்தியில், அதாவது உலக மக்கள் சபையில் ஒன்றாகக் கூடியிருக்கும் வேளையில் ஒருவரையொருவர் முத்தமிட வைப்பது ஒரு ஒழுங்கற்ற, அநாகரிக, அவலட்சணமான செயல். சென்னை சபையினர் அமெரிக்கா சென்று அங்கு வாழ்ந்தால் அது அவர்களுக்கு நலமாயிருக்கும். தமிழ்நாட்டில் அவர்கள் அநேகருக்கு இடறலாகவே இருக்கிறார்கள். திருமணத்தில் ஆண், பெண் முத்தமிடுவது மேல் நாட்டு நாகரிகம், கலாச்சாரம். அதற்கு தேவனுடைய வார்த்தையில், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. ஆதலால் அது நமக்கு தேவையில்லாத ஒன்று. திருமண முத்தம் நம்முடையவர்களை படுகுழிக்குள் அனுப்ப சாத்தான் தூண்டும் ஒரு வஞ்சகச் செயலாகும்.

77. உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் தங்களுக்கென்று பிரத்தியேகமான பழக்க வழக்கங்கள், சடங்குகள், பாரம்பரியங்கள், சடங்காச்சாரங்கள், ஆசாரங்கள். சம்பிரதாயங்கள் உடையவர்களாய் இருக்கிறார்கள். உண்ணும் உணவிலும், உடுக்கும் உடையிலும் அதாவது நடையுடை பாவணைகள் அனைத்திலும் வித்தியாசங்கள் உண்டு. அமெரிக்க நாட்டு மக்கள் பண்பாடு, கலாச்சாரம் வேறு; ஆப்ரிக்கா நாட்டு மக்களது பண்பாடு, நாகரிகம் வேறு. அவ்வண்ணமாகவே இந்திய மக்கள் பண்பாடு, நாகரீகம் வேறு. ஆப்பிரிக்கா மக்களைப் போன்று. அமெரிக்கா மக்களைப்போன்று நாமும் நடந்து கொள்ள முயற்சி செய்யக்கூடாது. நல்ல காரியங்களைக் கைக்கொள்ளுவதில் தவறு இல்லை. அமெரிக்க மக்கள் தீர்க்கதரிசி கூறுவது போன்று எங்கும் எந்த இடத்திலும் திருமணம் ஆனவர்கள், திருமணம் ஆகாதவர்கள் ஒருவரையொருவர் முத்தமிடுவது வழக்கம். அது அவர்கள் கலாச்சாரம். ஏனென்றால் அது ஒரு விபச்சார நாடு. அந்த விபச்சார நாட்டின் பழக்க வழக்கங்களை நமது மக்கள் மீது சகோ.பிரன்காம் திருமண ஆராதனையில் மணமகன் மணமகள் முத்தமிட்டனர் என்ற போர்வையின் கீழ் கொண்டு வந்து, நாமும் அதன்படி நடக்க வேண்டும் என்று கூறுவது அபத்தம், அநியாயம், அக்கிரமம். தேவையற்ற ஒரு காரியம். ஒரு பேய்த்தனத்துக்கடுத்த செயல். ஒரு தேவபக்தியற்ற காரியமாகும். தேவனுடைய சபையில் தீர்க்கதரிசி உபதேசமாக ஒரு காரியத்தை அல்லது ஒரு சடங்காச்சாரத்தைக் கொண்டு வந்தால் அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். ஆனால் அந்த உபதேசம் கூட தேவனுடைய வார்த்தையோடு ஒத்துப்போகிறதா என்று நாம் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இங்கு திருமண முத்தத்தை தேவனுடைய சபையில் ஒரு சடங்காச்சாரமாக அவர் நுழைக்கவில்லை. அப்படியிருக்க சென்னை சபை ஏன் அதை ஒரு சடங்காச்சாரமாக நுழைக்கிறது. மனுஷனுடைய கற்பனைகளும், போதனைகளும் நமக்குத் தேவையில்லை.

78. ஆனால் திருமண அடையாளமாக அந்நாட்களில் தலைமாலை உபயோகிக்கப்பட்டு வந்தது. இது குறித்து நாம் தேவனுடைய வார்த்தையில் காண்கிறோம். நாமும் அதைக் கடைப்பிடிக்கிறோம். ஏனென்றால் அது திருஷ்டாந்தமாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. வேதாகம காலத்தில் அவர்கள் விவாக மோதிரங்களை அணிந்திருந்தனர். அது தலைமாலை என்று அப்போது அழைக்கப்பட்டது. அதை அவர்கள் தலையில் அணிந்து கொண்டிருந்தனர். அதில் ஒன்பது வெள்ளிக்காசுகள் இருந்தன. அவர்கள் விவாகமானவர்கள் என்பதைக் காண்பிக்க, அது சரி என்று நான் நினைக்கிறேன். (கே.ப.283, பத்தி 66) பாருங்கள் வேதாகம

நாட்களில் திருமணமானவர்கள் என்பதற்கு அடையாளமாக அவர்கள் தலைமாலை அணிந்திருந்தார்கள். அது வேதாகம நாட்களின் பாரம்பரியமாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் அது மாறி இந்நாட்களில், நமது நாட்டில் சில இடங்களில் மோதிரம் அணிகிறார்கள், சில இடங்களில் தாலி (கழுத்து மாலை) அணிகிறார்கள். சில இடங்களில் கையில் தோள்பட்டையின் கீழ் ஆரம் அணிகிறார்கள். சிலர் கால்களின் விரல் ஒன்றில் சில வளையங்களை அணிகிறார்கள். இவ்வாறாக பற்பல இடங்களில் பற்பல விதமான அடையாளச் சின்னங்களை அணிகிறார்கள். கிறிஸ்தவர்கள் அவர்கள் வாழும் சமுதாயத்தில் எந்தவிதமான ஒரு அடையாச் சின்னத்தை அணிகிறார்களோ அதை அணிந்தால் போதும். அந்தக் கிறிஸ்தவப் பெண் அவர்கள் ஜனங்கள் மத்தியில் அப்பொழுதுதான் திருமணம் ஆனவள் என்று அந்த அடையாளச் சின்னத்தின் மூலம் அடையாளம் கண்டுகொள்ளப்படுவாள். மற்றபடி அவள் அடையாளம் கண்டுகொள்ளப்படமாட்டாள். அவள் அணிந்த அடையாளச் சின்னம் அவள் மக்கள் மத்தியில் அர்த்தமற்றதாகப் போய்விடும்.

79. ஆதலால் பிரியமானவர்களே, ஏழாம் சபைக்காலத் தூதன் திருமணத்தில் மோதிரம் அணிந்திருந்ததால், நாமும் அதைத்தான் அணிய வேண்டும். அவருடைய திருமண ஆராதனையில் மணமகன், மணமகள் ஒருவரையொருவர் முத்தமிட்டார்கள். அவ்வண்ணமாகவே நாமும் செய்ய வேண்டும். அது தேவனுடைய சபையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது ஒரு தவறான போதனை. இவர்கள் இனி அனைத்துக் காரியங்களிலும் அமெரிக்கர்களைப் பின்பற்றி காப்பியடித்து அவர்களைப் போல் ஆடை அணிய வேண்டும், அவரைப் போல் ஆகாரம் புசிக்க வேண்டும், அவர்களைப்போல் நம்முடைய நடை உடை பாவணைகள் அனைத்தும் இருக்க வேண்டும் என்று போதிப்பார்களோ என்று ஐயப்படுகிறேன். அப்படியானால் அது மனுஷர்களுடைய கற்பனை. தேவனுக்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அமெரிக்கர்களைக் காப்பியடிப்பது ஆரோக்கியமான ஒரு போதனை அல்ல. ஆனால் சகோ.பிரன்காம் ஆவிக்குரிய காரியங்களை உபதேசமாக சபைக்குக் கொடுக்கும்போது அதை நாம் நூற்றுக்கு நூறு கடைப்பிடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

80. வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல், அவரது சபையில் திருமண அடையாளச் சின்னமாக எதுவும் அணியக்கூடாது. அவ்வாறு நகை எதுவும் அணிந்திருந்தால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கமாட்டேன் என்கிறார். இது என்ன? மனுஷருடைய கற்பனைகளை, உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னது நிறைவேறிக்கொண்டிருக்கிறது. ஆக வலசரவாக்கம் கல்வாரி ஜெபவீடு வீணாய் தேவனுக்கு ஆராதனை செய்து வருகிறது. இது குறித்து தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? நசரீன் மக்களே, விவாக மோதிரத்தை அணிந்துள்ள ஒரு ஸ்திரீக்கு நீங்கள் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை என்று எனக்குத் தெரியும். அந்த மனப்பான்மை அவசியமில்லை என்று நினைக்கிறேன்.(கே.ப.283,பத்தி 66) பிரியமானவர்களே, காரியங்கள் இப்படியிருக்க தேவனுடைய சபையில் திருமணத்தின் அடையாளமாக மோதிரம் மட்டும்தான் அணிய வேண்டும் என்பதும் மனுஷருடைய கற்பனை.

81. ஒரு பாஸ்டர் தேவனுடைய வார்த்தையாகிய மேய்ச்சலில் தன் மந்தையை நடத்த வேண்டும். தன் சுய கற்பனைகளை தேவனுடைய சபையில் போதனையாக உபதேசிக்கக்கூடாது. பவுலைப் பாருங்கள் அவன் என்ன கூறுகிறான்? சகோதரரே நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்கு சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்பக்கொடுக்கிறேன் என்கிறான். அப்20:26-32. பாருங்கள் ஒரு ஊழியக்காரன் தனது மந்தையை தேவனுடைய கிருபையுள்ள வசனத்துக்கும் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசங்களுக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் ஒப்புக்கொடுக்க வேண்டுமேயன்றி ஒரு நாட்டுக் கலாச்சாரத்திற்கு, பாரம்பரியத்திற்கு ஒப்புக்கொடுக்கத் தேவையில்லை. ஊழியக்காரன் திருவசனத்திலும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் உபதேசங்களிலும் பிரயாசப்படுகிறவனாயிருக்க வேண்டும். 1தீமோ.5:17. திருமண முத்தம் தேவனுடைய வார்த்தையை பிரதிபலிக்கிறதா? அல்லது அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களைப் பிரதிபலிக்கிறதா? இல்லவே இல்லை. மாறாக அது மந்தையை, சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிற ஒரு மனுஷனுடைய கற்பனையை, ஒரு நாட்டின் பாரம்பரிய சடங்காச்சார கலாச்சாரத்தை பிரதிபலிக்கிறதாயிருக்கிறது.

82. வலசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல், மும்பை பாஸ்டர் டேனியல் கிறிஸ்டியான் போன்றவர்கள் அவலட்சணமான ஆதாயத்திற்காக மந்தையை இறுமாப்பாய் ஆளுகை செய்து, மந்தையைக் கொண்டு தங்களுக்கு உலக ஆஸ்திகளையும், சொத்து சுகங்களையும் சேர்த்துக் கொண்டார்கள். தங்கள் வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டார்கள். நிச்சயமாக மக்கள் அவர்களைத்தான் சார்ந்து போவார்கள். ஏனென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலம்.

83. பிரியமானவர்களே, நீங்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள், விழித்திருங்கள். எனென்றால், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித் திரிகிறான்.

84. அடுத்து சென்னை சபை இது எங்கள் சபைக்கடுத்த உபதேசம் என்ற ஒரு குறுகிய வட்டத்திற்குள் இல்லாமல் இது தேவனுடைய சபைக்கடுத்த உபதேசம் என்ற பரந்த மனப்பான்மைக்குள் நடந்து கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனைக் கூறுகிறேன். தேவனுடைய சபையில் ஒவ்வொரு பாஸ்டரும் தங்களுக்கென்று புதுப்புது உபதேசங்களைக் கொண்டுவர முடியாது. தேவனுடைய சபையில் உபதேசம் என்பது உலகமெங்கும் பரவியுள்ள தேவனுடைய சபைக்குப் பொதுவானது. இது எனது சபைக்கடுத்த போதகம் என்று ஒரு பாஸ்டர் கூறுவாராகில் அவர் கள்ளக்கபடமுள்ள வேலையாலே.

85. பாருங்கள், நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். 1கொரி 12:13. கிறிஸ்துவின் சரீரத்தில் யூதர்கள், கிரேக்கர்கள், அடிமைகள், சுயாதீனர்கள், அமெரிக்கர்கள், ஆப்பிரிக்கர்கள், இந்தியர்கள் உண்டு. உலகப்பிரகாரமான காரியங்களில் இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் நாட்டுப் பண்பாடு, கலாச்சாரத்தை, பாரம்பரியத்தை

சார்ந்தவர்களாய் இருப்பார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்துவுக்குள் வரும்பொழுது அது மாறுபடுகிறது. கிறிஸ்துவுக்குள் அனைவருக்கும் சுவிசேஷ உபதேசங்கள் ஒன்று. திருமண முத்தம் ஒரு சுவிசேஷ உபதேசத்துக்கடுத்ததல்ல. ஏனென்றால் திருமணம் இம்மைக்குரியது. மத்.22:23-30, மாற்.12:23-25 மற்றும் லூக்.20:34-35. திருமண முத்தமும் இம்மைக்குரிய ஒன்று ஆகும். ஆதலால் யூதர்கள், கிரேக்கர்கள், அமெரிக்கர்கள், ஆப்பிரிக்கர்கள், இந்தியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பழக்க வழக்கங்கள்படி திருமண சடங்கை ஆசரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். திருமணம் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று தேவனுடைய சபையில் ஒரு உபதேசம் காணப்பட்டதாக இல்லை. ஆதலால் அப்படியொரு உபதேசத்தை யாரும் சபைக்குள் கொண்டு வரமுடியாது. சபை என்று கூறும்போது அங்கு இது என் சபை, உன் சபை என்ற பாகுபாடே கிடையாது. அனைத்தும் தேவனுடைய சபை. இது என் சபை என்போமாகில், அதற்கும் தேவனுடைய சபைக்கும் எந்தவிதமான பங்கும் கிடையாது. பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களே இது என் சபைக்கடுத்த உபதேசம் என்றும் உங்கள் சித்தாந்தத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள்.

86. எதற்கெடுத்தாலும் பிரன்காம், பிரன்காம் என்பது பிரன்காம் கிறிஸ்து ஆவியாகும். இந்த ஆவி பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாருக்குள் வாசம் செய்கிறதை அவர் அறியாதிருக்கிறார். பிரன்காம் பக்தர்கள், பிரன்காம் பிரன்காம் என்று கூறிக்கொண்டு அவருடைய நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள். அவருடைய ஊழியத்திற்கு, பெயருக்கு களங்கம் கொண்டு வருகிறார்கள். இதுவும் சாத்தானுடைய செயலே.

87. திருமண வேலையில் ஆண், பெண் முத்தமிடுவது மேல்நாடுகளின் கலாச்சாரம். ஏழாம் சபைக்காலத் தூதன் அவருடைய நாட்டின் கலாச்சாரத்தின்படி நடக்கிறவராக இருக்கிறார். அதைப் பார்த்து நாமும் காப்பியடிக்கத் தேவையில்லை. ஆவிக்குரிய காரியங்களில் மட்டும் அவரது அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுகிறவர்களாய் இருப்போம். நமது நாட்டில் ஆண், பெண் முத்தமிடும் கலாச்சாரம், பழக்க வழக்கம் இல்லை. ஆதலால் அதை சபைக்குள் நுழைக்க வேண்டாம். தேவனுடைய சபையில் அப்படிப்பட்ட உபதேசம் எங்கும், எக்காலத்திலும் இருந்ததில்லை. மாறாக தேவனுடைய சபையில் பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம் இருந்தது. இதை ஒரு ஊழியக்காரன் சபைக்குள் கொண்டு வந்தால் அது வரவேற்கத்தக்கது. திருமண முத்தம் எந்த விதத்திலும் தேவனுடைய சபைக்கு தேவையில்லாத ஒன்று. மேலும் திருமண நேரத்தில் இந்த முத்தம், அதைப் பார்க்கும் ஒரு உலகத்தானுக்கு அவலட்சணமாகவும், அவமானமாகவும், வெட்கக்கேடான காரியமாகவும் இருக்கும்போது அது ஆவிக்குரியவர்களான நமக்கு எவ்வளவு அதிகம் அதிகம் இருக்க வேண்டும். சற்று சிந்தித்துப் பாருங்கள்.

88. இங்கு நாம் தேவனுடைய வார்த்தையில் பலர், பல சூழ்நிலைகளில் எப்படி முத்தம் செய்தார்கள் என்பதை தியானிப்போம்.

அ) ஈசாக், யாக்கோபுபை தன் மூத்த மகனாக ஏசா என்று நினைத்து, தன் இளைய மகனாகிய யாக்கோபு தன்னை ஏமாற்றுகிறதை அறியாது, அவனை தன் கிட்ட அழைத்து தன்னை முத்தம் செய்ய கேட்டுக்கொண்டான். யாக்கோபு தன் தகப்பனை முத்தம் செய்தான். இது பெற்றோர்களுக்கு பிள்ளைகள்மேல் உள்ள பாசத்தைக் காட்டுகிறது. பெற்றோர் பிள்ளைகளால் முத்தம் செய்யப்படுவதை விரும்புகிறதை நம்மிடத்திலும் காண்கிறோம். இங்கு ஈசாக் யாக்கோபுவை ஏசா என்று நினைத்து ஆசீர்வதிக்கிறான்.ஆதி.27:26,27,36. யாக்கோபு தன் தகப்பனை முத்தமிடும்போது தன் தகப்பனாகிய ஈசாக்கைக் கட்டிக்கொண்டு அவன் முதுகில் முத்தம் செய்திருக்க வேண்டும். ஏனென்றால் ஈசாக், யாக்கோபுடைய வஸ்திரங்களின் வாசனைகளை மோந்தான் என்று கூறப்பட்டுள்ளது. இது அன்பின் முத்தம்.

ஆ)இங்கு யாக்கோபு தன் தாயின் சகோதரனாகிய லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலைக் கண்டபோது, அவளை முத்தம் செய்து, சத்தமிட்டு அழுது, தன்னை அவளுக்கு அறிமுகம் செய்தான்.ஆதி29:11. இங்கு நெருங்கிய உறவினர்கள் ஒருவரையொருவர் எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத நேரத்தில் சந்தித்து அறிமுகப்படுத்தும் வேளையில் முத்தமிடுவதைக் காண்கிறோம். இதுவும் அன்பின் முத்தம்.

இ) இங்கு லாபான் தன் சகோதரியின் குமாரனாகிய யாக்கோபு மூலமாக குடும்பச்செய்திகளைக் கேட்டு, அவனைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்து, தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதைக் காண்கிறோம்.ஆதி29:13. இதுவும் அன்பின் முத்தம். லாபான், யாக்கோபுவைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்ததால் முற்கால வழக்கப்படி கழுத்தில் முத்தம் செய்திருக்க வேண்டும்.

ஈ) தன் மக்களை காண வந்த லாபான், அவர்களைக் கண்டு, பின்பு அவர்களை விட்டு பிரியும் நேரத்தில், தன் குமாரரையும், குமாரத்திகளையும் அழைத்து அவர்களை முத்தமிட்டு ஆசீர்வதிக்கிறான்.ஆதி31:55. இதுவும் பெரியவர்கள் சிறியவர்களை விட்டுப் பிரியும்போது அவர்களை அன்பினிமித்தமாக முத்தமிட்டு ஆசீர்வதிக்கிற காட்சியாகும்.

உ) ஏசா தன் தம்பியாகிய யாக்கோபுவை நீண்ட காலத்திற்கு பின் கண்ட உடன் அன்பினிமித்தமாக யாக்கோபுயிடம் ஓடி வந்து அவனைக் கட்டித் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டதைக் காண்கிறோம். இருவரும் அழுதனர். அழுகை ஆனந்தக் கண்ணீராக இருந்தது. ஆதி33:4. ஆம் ஒரே தாயிடம் பால் குடித்து வளர்ந்த சகோதரர்கள் ஒருவரையொருவர் நீண்ட இடைவேளைக்குப் பிறகு சந்தித்தபோது, முத்தமிட்டு அழுது, தங்கள் அன்பை, பாசத்தை வெளிப்படுத்தினர். உன்8:1.

ஊ) இங்கு யோசேப்பு தன் சகோதரர்களைப் பார்த்து நீங்கள் என்னை விற்றுப்போட்டதினால் சஞ்சலப்பட வேண்டாம். அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சனை செய்யும்படிக்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே எகிப்துக்கு அனுப்பினார் என்று கூறி அவர்கள் யாவரையும் முத்தம் செய்து கட்டிக்கொண்டு அழுததாகக் காண்கிறோம்.ஆதி.45:5&15. இது ஒரே தகப்பன் பிள்ளைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தனிப்பட்ட ஒருவனுக்குத் தீங்கு செய்ததை நினைத்து, மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, ஒருவருக்கொருவர் சகோதர அன்பை வெளிப்படுத்தும்பொழுது தீங்கை சகித்தவர் தீங்கு செய்தவர்களை முத்தமிடுவதைக் காண்கிறோம். இதுவும் அன்பினிமித்தமாக செய்த முத்தம் ஆகும்.

எ) இங்கு இஸ்ரவேல் தன் மகன் யோசேப்புவின் பிள்ளைகளை அவனண்டைக்கு சேரப்பண்ணி, அவர்களை அணைத்துக்கொண்டு முத்தமிட்டதைக் காண்கிறோம். இங்கு தாத்தா, பேரப்பிள்ளைகளை அன்பினிமித்தமாக அணைத்து முத்தமிடுவதைக் காண்கிறோம்.ஆதி48:10.

ஏ) இங்கு சகோதரர் இருவர் ஊழியத்தின் பாதையில் ஒருவரையொருவர் சந்தித்தபோது தங்கள் அன்பை பகிர்ந்து கொண்டனர். ஆரோன், மோசேயைச் சந்தித்தபோது அவனை முத்தம் செய்கிறான். யாத்.4:27.

ஐ) மாமனும் மருமகனும் ஒருவரையொருவர் சந்தித்தபோது அன்பினிமித்தமாக முத்தம் செய்தனர். மோசே, தன் மாமன் எத்திரோ தன்னிடம் வரக்கண்டு, அவனுக்கு எதிர்கொண்டு போய், அவனை வணங்கி முத்தம் செய்வதைக் காண்கிறோம். யாத்.18:7. இதுவும் அன்பினிமித்தமாக ஒருவரையொருவர் முத்தமிட்டதாகும்.

ஒ) மீண்டுமாக, தகப்பன் மகனை முத்தமிடுகிறான். தாவீது தன் மகன் அப்சலோமை முத்தமிடுகிறான். தாவீது ராஜாவின் இருதயம் தன் மகன் அப்சலோமின் மேல் தாங்கலாய் இருந்தது. ஆதலால் அப்சலோம் அழைக்கப்பட்டான். தகப்பன், மகன் ஒருவரையொருவர் சந்தித்தபோது மகன் தகப்பனுக்கு முன்பாக தலையிலே விழுந்து வணங்கினான். தகப்பன் மகனை முத்தமிட்டான்.2சாமு14:1&33. இந்த முத்தம் தகப்பன் மகன் மேல் கொண்டுள்ள பாசத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

ஓ) ஒருவரையொருவர் வழிவிட்டு அனுப்பும்போதும் முத்தம் செய்தனர். இது நம்மிடத்திலும் உண்டு. இங்கு தாவீது பர்சிலாவை ஆசீர்வதித்து முத்தமிட்டு, அவனை அவன் வழி அனுப்பி வைத்ததைக் காண்கிறோம்.2சாமு19:20. பாருங்கள் இங்கு பெரியவன் சிறியவனை அன்பினிமித்தமாக முத்தமிட்டு ஆசீர்வதித்ததைக் காண்கிறோம்.

ஔ) இங்கு எலிசா தன் ஊழிய அழைப்பை பெற்றபோது, தன் தகப்பனையும், தாயையும் முத்தம் செய்து அவர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்று எலியாவை சார்ந்து கொள்ளுகிறான்.1இராஜா:19:20. இது மகன் பெற்றோர் மீது கொண்டுள்ள அன்பையும், பாசத்தையும் எடுத்துக்காட்ட கொடுக்கப்பட்ட முத்தம், அன்பின் முத்தம்.

ஃ) இங்கு ஒருவர் மற்றொருவர் மீது கொண்டுள்ள மிகுந்த அன்பினிமித்தமாக ஒருவர் கால்களை மற்றொருவர் முத்தமிடுவதாகும். இயேசுவின் மேல் கொண்டுள்ள அன்பின் மிகுதியால் பாவியான ஸ்திரீ அவருடைய பாதங்களை முத்தம் செய்கிறாள்.லூக்7:37&38.

க) விருந்துக்கு ஒருவரையொருவர் அழைக்கும்போது, அழைத்தவர் அழைக்கப்பட்டவர்களை முத்தமிடுவது யூதர்கள் வழக்கமாய் இருந்தது. அழைக்கப்பட்ட இயேசு அழைத்தவரால் முத்தமிடப்படாததைக் கண்டிக்கிறார். லூக்7:45.

கா) கர்த்தர் சவுலை தம்முடைய சுதந்திரத்தின் மேல் தலைவனாக அபிஷேகம் பண்ண சாமுவேலுக்குக் கூறினபோது, சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து சவுலின் தலையின் மேல் வார்த்து, அவனை முத்தம் செய்தான்.1சாமு.10:1. இது மரியாதையினிமித்தமாக செய்யப்பட்ட முத்தம்.

கி) நண்பர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியும் நேரத்திலும் முத்தம் செய்து அழுததைக் காண்கிறோம்.1சாமு.20:42. இவர்களுடைய சிநேகத்தைப் பாருங்கள். யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் தாவீதை தன் உயிரைப் போல சிநேகித்தான். 1சாமு.18:1. யோனத்தானுடைய மரணத்தை தாவீது கேட்டபொழுது என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன், நீ எனக்கு வெகு இன்பமாய் இருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாய் இருந்தது, ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாய் இருந்தது. பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே, யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்து போயிற்றே என்று புலம்பினான். 2சாமு.1:26.

கீ) நகோமி, தன் இரு மகன்களும் இறந்த பின், தன் இரு மருமக்களையும் அவர்கள் தாய் வீட்டிற்கு போகச்சொல்லி, அவர்களை ஆசீர்வதித்து முத்தமிட்டதைக் காண்கிறோம். ரூத்1:9. அப்பொழுது நகோமியின் மூத்த மருமகள் ஓர்பாள் தன் மாமியை முத்தம் செய்து தன் தகப்பன் வீட்டிற்குச் சென்றதைக் காண்கிறோம். ரூத்.1:14. இது சோகக்கட்டத்தில் ஒருவரையொருவர் முத்தமிட்டு ஒருவர் மற்றொருவரை பிரியும் வேளை. இவ்வாறாக மனவியாகுல நேரத்திலும், ஒருவரை விட்டு ஒருவர் பிரியும் நேரத்திலும் முத்தமிட்டனர்.

கு) இங்கு மகன் தன் தகப்பனிடம் அவன் ஆஸ்தியில் தன் பங்கைப் பெற்றுத் தூர தேசத்திற்குப் போய் அங்கே துன்மார்க்க ஜீவியம் செய்து, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டு, பின் தனக்கு புத்தி தெளிந்த போது, தன் தகப்பனிடம் எழுந்து புறப்பட்டு வருகிறதை தூரத்தில் கண்ட அவன் தகப்பன் மனதுருகி ஓடி அவனை கட்டிக்கொண்டு முத்தம் செய்வதைக் காண்கிறோம். லூக்.15:20. இது மனந்திரும்பிய பாவிக்காக சந்தோஷப்பட்டு அதினிமித்தமாக அந்த மனந்திரும்பிய பாவியை முத்தமிட்டதாகும். லூக்15:32.

கூ) மரித்த தன் தகப்பன் மேல் விழுந்து அவன் முகத்தில் முத்தம் செய்தார்கள். யாக்கோபு மரித்தபோது யோசேப்பு தன் தகப்பன் முகத்தின் மேல் விழுந்து அவனை முத்தம் செய்தான். ஆதி.50:1. இது மரித்த தகப்பனுக்கு மகன் செலுத்தும் மரியாதையின் நிமித்தமாக கொடுக்கப்பட்ட முத்தம் ஆகும்.

கெ) தன் காரியங்களைச் சாதிக்க, அதற்காக பிறரை கவர்ச்சி செய்து தன் பக்கம் இழுக்க, அவர்களிடம் அன்பு காட்டுவது போல் நடித்து, அவர்களை முத்தம் செய்து தன் பக்கம் இழுத்துக் கொண்டான் அப்சலோம். இது கபடமுள்ள முத்தம் ஆகும். 2சாமு.15:5&6.

கே) யோவாபின் வஞ்சனையான முத்தத்தைப் பாருங்கள். அவன் அமாசாவைப் பார்த்து என் சகோதரனே சுகமாய் இருக்கிறாயா என்று கூறி, அவனை முத்தம் செய்யும்படி, தனது வலது கையினால் அவன் தாடியைப் பிடித்து, தன் கையில் இருக்கிற பட்டயத்துக்கு அமாசா எச்சரிக்கையாய் இராதபோது, யோவாப் அவனை அவன் குடல்கள் தரையிலே சரிந்து போகத்தக்கதாய், அதினால் வயிற்றிலே ஒரே குத்தாகக் குத்தினான். அமாசா செத்துப்போனான். இது வஞ்சனையான முத்தம். 2சாமு20:9&10. சத்துரு இடும் முத்தம் வஞ்சனையுள்ளது. நீதி.27:6.

கை) யூதாஸ் அப்போஸ்தலருக்குள் ஒருவனாக எண்ணப்பட்டாலும், அநீதியின் கூலியை விரும்பி, இயேசுவை முத்தம் செய்து, இயேசுவை பிடித்தவர்களுக்கு வழிகாட்டி அதினால் ஒரு நிலத்தை சம்பாதித்தான். லூக்.22:48. இதுவும் கள்ள முத்தம்.

கொ) இது வேசியின் முத்தம். பேதைகளாகிய வாலிபர்களுக்குள்ளே ஒரு புத்தியீன வாலிபனை வேசியின் ஆடை ஆபரணம் தரித்த தந்திரமுள்ள ஸ்திரீ பிடித்து முத்தம் செய்ததை நாம் நீதி7:13ல் காண்கிறோம். அவன் நிலையை மேலும் 21-23 வசனங்களில் வாசிக்கிறோம். இதென்ன? வேசியின் முத்தம். இதுவும் வஞ்சனையுள்ளது.

கோ) முடிவாக இங்கு சபையின் மூப்பர்கள், அப்போஸ்தலனை முத்தம் செய்ததைப் பார்க்கிறோம். அப்.20:38. பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு எபேசு சபையின் மூப்பர்கள் அவனை முத்தம் செய்தார்கள். இந்த ஊழியக்காரன் சபைக்குப் பிரயோஜனமானவைகள் ஒன்றையும் மறைத்து வைக்காமல் சத்தியத்தை சத்தியமாக எடுத்துக் கூறினவன். அவன் எங்கும், எதிலும் மாய்மாலம் பண்ணவில்லை. அவன் ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் இச்சிக்கவில்லை. அவன் அவனுக்காகவும், அவனுடனே கூட இருந்தவர்களுக்காகவும் தன் கைகளினாலே வேலை செய்தான். வாங்குகிறதைப் பார்க்கிலும்

கொடுக்கிறதே பாக்கியம் என்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைக் கடைப்பிடித்தான். அப்படிப்பட்ட ஒரு ஊழியக்காரன் தங்களை விட்டு பிரிந்ததினால் அவர்கள் அதிகமாகத் துக்கப்பட்டு, மிகவும் அழுது, அவனை முத்தமிட்டு விடை கொடுத்தனுப்பினார்கள். அப்.20:17,20,26,33-38. இதுவும் அன்பினிமித்தமாக, சகோதர சிநேகத்தினிமித்தமாக மூப்பர்கள் அப்போஸ்தலனை முத்தமிட்டதாகும். இது பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம். இந்த முத்தம்தான் மணவாட்டி சபையில் காணப்பட வேண்டிய ஒன்று.

89. இதுவரை பலவிதமான சூழ்நிலையில் அன்பினிமித்தமாக, மரியாதையினிமித்தமாக, வஞ்சனையினிமித்தமாக, சகோதர சிநேகத்தினிமித்தமாக, தீயஎண்ணத்துடன் ஒருவர் மற்றொருவரை முத்தமிட்டதற்கு 24 உதாரணங்களைக் கண்டோம். தேவனுடைய ஜீவ வார்த்தைகளில் நாம் எங்கும் திருமண முத்தம் குறித்து காணவில்லை. அது நமக்கு திருஷ்டாந்தமாக எழுதி வைக்கப்படவும் இல்லை. ஆதலால் அதை தேவனுடைய சபையில் உபதேசமாகக் கொண்டு வருவது லௌகீக ஞானமேயன்றி பரத்திலிருந்து வந்த ஞானம் அல்ல.

90. தேவனுடைய சபையில் உள்ள பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம் குறித்து இனிக் காண்போம். இதை நாம் ரோ.16:16, 1கொரி16:20, 2கொரி.13:12, 1தெச.5:26, 1பேது.5:14 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். மறுபடியும் பிறந்தவர்கள், அதாவது தேவனால் பிறந்தவர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தார்கள். அவர்கள் அன்பு மாயமற்றதாக இருந்தது. அதாவது தேவனிடத்தில் அன்பு கூறுகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூற வேண்டும் என்பதே தேவனுடைய கற்பனையாய் இருக்கிறது. 1யோ.4:20&21. ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார். 1யோ.4:7&8. அந்த அன்பு ஒருக்காலும் ஒழியாது. 1கொரி.13:8. அது ஆவியின் கனிகளில் முதன்மையாது. மிகச் சிறந்தது. ரோ.5:5, 1கொரி.13:1-13, கலா.5:22&23. அன்பு ஒருவனிடத்தில் இல்லை என்றால் அவன் ஒன்றுமே இல்லை. 1கொரி.13:2. நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒரிவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே தேவனுடைய கற்பனையாயிருக்கிறது. யோ.15:12.

91. தேவனுடைய சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளானவர்கள் சுத்தமான இருதயத்தோடு ஒருவரையொருவர் நேசிப்பதால், தங்களிலுள்ள தெய்வீக அன்பினால் அவர்கள் நெருக்கி ஏவப்பட்டு தங்களிலுள்ள ஆவிக்குரிய உற்சாகத்தை வெளிப்படுத்த ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தினால் வாழ்த்தினார்கள். அன்பின் முத்தத்தினால் வாழ்த்தினார்கள். சகோதர சிநேகத்தை வெளிப்படுத்தினார்கள். சபையில் ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் அன்பின் நிமித்தமாக பரிசுத்த முத்தமிட்டார்கள், அன்பின் முத்தமிட்டார்கள்.

92. இது குறித்து இக்காலத்திற்குரிய செய்தி என்னக்கூறுகிறது? அவர்கள் ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தினால் வாழ்த்தினார்கள். அவர்கள் கழுத்தின் பின்புறத்தில் முத்தமிட்டார்கள். அவர்கள் கழுத்தின் மேல் விழுந்து, அவர்களை கழுத்தின் பின்புறத்தில் முத்தமிட்டார்கள். அது கைக்குலுக்குதல் சபைக்குள் வரும் முன்பு. அது ஒரு வாழ்த்துதல். அப்படித்தான் அது உள்ளது. அவர்கள் ஒருவர் கைகளை ஒருவர் குலுக்கியதில்லை. அவர்கள் ஒருவரையொருவர் தழுவி, ஒருவரையொருவர் கழுத்தின் பின்புறத்தில் முத்தமிட்டனர். உதடுகளிலோ முகத்திலோ அல்ல. அவ்விதம் செய்வது சீர்குலைச்சலை உண்டாக்கும். அதிலிருந்து விலகியிருங்கள். கே.ப.156, பத்தி 127.

93. ஆக தேவனுடைய சபையில் திருமண முத்தம் எங்கும் காணப்படவில்லை. அது திருஷ்டாந்தமாக எங்கும் நமக்கு எழுதிவைக்கப்படவில்லை. சபையில் மனுஷருடைய கற்பனைகள் போதிக்கப்படுமானால் அது தேவனுடைய சபை அல்ல. அது ஒரு மனிதனால் ஏற்படுத்தப்பட்ட தனியார் சபை ஆகும். இக்காலத்திற்குரிய செய்தியை பிரதிபலிக்க சென்னையில் ஒரு சபையும் இல்லை.

94. இந்த பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம் விலையேறப்பெற்றது, புனிதமானது. ஒருவன் தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாக குற்றமற்ற மனசாட்சியோடு நிரம்பி வழியும் அன்பினால் நெருக்கி ஏவப்படுவதனால் உண்டான விளைவே பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம். இதுதான் அப்போஸ்தலர் ஒழுங்கு, தேவனுடைய சபையில் பரிசுத்தவான்களிடத்தில் காணப்பட்ட முத்தம். திருமண முத்தம் சென்னை சபையின் உபதேசம். அதற்கும் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லை. பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள அன்பிற்கு அடையாளமாக இருக்கிறது. திருமண முத்தம் சென்னை சபையில் நமது மக்களிடத்தில் மாம்ச இச்சைகளை உண்டு பண்ணுகிறதற்கு சாத்தானின் கிரியையாயிருக்கிறது. இவர்களைக் குறித்து இயேசு கிறிஸ்து: நீங்கள் வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறீர்கள் என்கிறார். நீங்கள் உங்கள் பாரம்பரியங்களை உபதேசங்களாய்ப் போதித்து (திருமண முத்தம்) அதே வேளையில் தேவனுடைய கற்பனைகளை (பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம்) அவமாக்குகிறீர்கள் என்கிறார். ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே வாருங்கள், தேவனுடைய சபையில் நாம் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள அன்பிற்கு அடையாளமாக பரிசுத்த முத்தத்தோடே, அன்பின் முத்தத்தோடே ஒருவரையொருவர் வாழ்த்துவோம். மற்ற அப்போஸ்தலர் தீர்க்கதிரிசிகள் உபதேசங்களை நாம் கடைப்பிடிப்பது போல இதையும் கடைப்பிடிப்போம். தேவனுடைய சபையில் தேவனுக்கு ஏற்றவைகளை சிந்திப்போம். ஆதலால் பரிசுத்த முத்தம், அன்பின் முத்தம் சபையில் தேவையில்லை என்று கூற வேண்டாம். இது தேவனுடைய சபைக்கு அப்போஸ்தலர்கள் எழுதிய நிருபங்களில் ஐந்து இடங்களில் கூறப்பட்டுள்ளது.

95. முடிவாக நான் உங்களுக்கு எழுதினவைகளை ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்ளாதது உங்கள் விருப்பம். ஆனால் நான் உங்களுக்கு தகாத உபதேசங்களை விட்டு விலகியிருக்க எச்சரித்து, தகுந்த உபதேசங்களை கடைப்பிடிக்க வலியுறுத்த வேண்டியவனாய் இருக்கிறேன்.

96. இந்த வெளிப்பாட்டைக் காணத் தவறாதீர்கள். தேவனே இதைக் காணும்படி செய்யும். நான் இதைக் காணும் வரையில் நீங்களும் காண்பீர்களாக.... தேவன் ஒரு கூட்டம் ஜனங்களுடன் ஈடுபடுவதில்லை.... அவர் உங்களுடன், தனிப்பட்ட நபர் என்னும் முறையில் ஈடுபடுகிறார். நாம் தனிப்பட்ட நபர்களுடன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுகிறோம்... நாம் தனிப்பட்ட நபர்களாக, ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுகிறோம். தேவன் ஒவ்வொருவருடன் ஈடுபடுதல்.... பூமியின் எல்லாப் பாகங்களிலும் அவர்களைப் பரவச் செய்து, தனிப்பட்ட நபருடன் ஈடுபடுதல்....

பிரித்தெடுத்தல், பிரித்தெடுக்கப்படுதல்.... தேவனுடைய வார்த்தை அனைத்தையும் விசுவாசிக்கும் ஒருவன், தேவனுடைய வார்த்தையில் ஒரு பாகத்தை மாத்திரம் விசுவாசிக்கும் ஒருவனுடன் இணைந்திருக்க முடியுமா? இரவு பகலுடன் இணைந்திருக்க முடியுமா? விசுவாசி அவிசுவாசியுடன் இணைந்திருக்க முடியுமா? தேவனுக்கு பிரித்தெடுக்கப்பட்டவர்கள் தேவை. (ஒன்றாயிருத்தல், பத்தி 109-112).

97. ஆம் பிரியமானவர்களே, ஒருவன் இக்காலத்திற்குரிய செய்தியை, தேவனுடைய வார்த்தையை முற்றிலுமாக விசுவாசிக்காமல், ஒரு பாகத்தை விசுவாசித்து, மற்றொரு பாகத்தை உதறித் தள்ளுவானேயாகில் அவனை குறித்துக் கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். தேவனே நான் அவர்கள் பேரில் கொண்டுள்ள வெறுப்பினால் இதை அவர்களுக்கு விரோதமாக எழுதினேன் என்று அவர்கள் எண்ணாதிருப்பார்களாக. மாறாக அது அன்பினால் எழுதப்பட்டது என்பது அவர்கள் காண்பார்களாக. அதை அருள் புரியும். எங்களில் காணப்படும் வேறுபாடுகளுக்கும், எங்கள் சுய சிந்தனைகளுக்கும் நாங்கள் மரித்து உமது வார்த்தையை ஏற்றுக்கொள்ளும்படி செய்யும். ஆமென். அன்று தெயுதாஸ் நானூறு பேரையும், கலிலேயனாகிய யூதாஸ் அநேக ஜனங்களையும் தன் பக்கம் இழுத்ததுப்போன்று நம்மத்தியில் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார், பாஸ்டர் சாமுவேல் போன்றவர்கள் ஒரு கூட்டம் ஜனங்களை வைத்திருப்பதால் தங்கள் மாம்ச சிந்தையிலே வீணாய் இறுமாப்புக்கொண்டு மாறுபாடான உபதேசங்களைத் தேவனுடைய சபைக்குள் கொண்டுவருகிறார்கள். சென்னை சபையும், கல்வாரி சபையும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார், பாஸ்டர் சாமுவேலினுடையவைகளாக இருக்குமானால் அங்கு மூக்கை நுழைக்க எனக்கு அதிகாரம் இல்லை. ஒரு பக்கம் அவர்கள் தங்களுடைய சபை என்று கூறுகிறார்கள். மறுபக்கம் இது தேவனுடைய சபை என்று கூறுகிறதினால் நான் அவர்களுடைய தவறான உபதேசங்களில் இடைப்படுகிறேன். பிரியமானவர்களே நீங்கள் இவர்களை நம்பி உங்கள் பந்தயப் பொருளை இழந்துப் போகாதப்படிக்கு உங்களை வஞ்சியாதிருக்க பாருங்கள்.

### *தவறுக்கு வருந்துகிறேன், மன்னிக்கவும்.*

98. எனது கடந்த வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் வணங்கிய இயேசு கிறிஸ்துவின் தூதன் திஸ்பியனாகிய எலியா தீர்க்கதரிசி என்ற செய்தித் தொகுப்பில் அதில் 31வது பக்கத்தில் 169வது பத்தியில் இரண்டாவது வரியில் இவரது வீட்டில் ஒரு சிறிய அறையில் ஏழு நாட்கள் ஏழாம் சபைக்காலத் தூதன் தங்கியிருந்து ஏழு முத்திரைகளின் இரகசியங்களைப் பெற்றார். ஆதலால் இவர் சகோ.பிரன்காமுக்கு மிக்க நெருக்கமான நபர்களில் ஒருவராகும் என எழுதியுள்ளேன். இது ஒரு பெரிய தவறு. சகோ.பிரன்காம் C.W. வூட் எனபவரது வீட்டில் இல்லை. மாறாக சகோ.பாங்க்ஸ் வூட் என்பவரது வீட்டில் தங்கியிருந்தார். இது இந்த வூட் என்ற பெயரில் வந்த குழப்பம். இந்தச் செய்தித் தொகுப்பு ஒரு ஆண்டுக் காலமாக எழுதப்பட்டு; பல பாடுகள், நெருக்கடிகள், இடையூறுகள், தேவையற்ற செலவுகள் இவை அனைத்தையும் மேற்கொண்டு வெளியிடப்பட்டது. என்னை அறியாமலேயே இந்தத் தவறு நடந்து விட்டது. வழக்கமாக ஒரு செய்தித் தொகுப்பை 2/3 முறை சரிபார்த்து கம்ப்யூட்டர் டைப்புக்கு எடுத்துச் செல்லுவேன். அப்படியிருந்தும் அந்தத் தவறு என் கண்களுக்கு மறைவாயிருந்தது அறிந்து ஆழ்ந்த மனஸ்தாபத்துடன் வருந்துகிறேன். நானும் தவறுக்குரியவனே என்பதை ஒருக்காலும் மறந்ததில்லை. மேலும் மேற்கூறிய தவறான பகுதியை செய்தித் தொகுப்பிலிருந்து நீக்கி விட்டேன். என் தவறைத் திருத்திய V.O.G. சகோ.பிரபுவுக்கு மிக்க நன்றி. யோபு.6:24. சகோதரனைப் போன்று பலர் எழும்ப வேண்டும் என்பதே என் வாஞ்சை.

99. திருமண முத்தம் தேவனுடைய சபையில் பக்திவிருத்தியைக் கொண்டுவருமா? ஒருக்காலும் கொண்டுவராது. மாறாக கண்களின் இச்சைகளையும், மாம்சத்தின் இச்சைகளையுமே கொண்டுவரும். ஆதலால் திருமண முத்தம் தேவனுடைய சபையில் தேவையற்ற ஒரு உபதேசம். நான் எழுதியுள்ளது வெறுமனே தங்களை விசுவாசிகள் என்று அழைத்துக்கொள்ளும் ஜனங்களுக்கு அல்ல, சாத்தானும் கூட தன்னை ஒரு விசுவாசி என்றே கூறிகொள்கிறான். இது உண்மையான விசுவாசிகளுக்கு மட்டுமே. எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைக்கு முரணாக விதைக்கப்படும் எந்த முரண்பாடும் அல்லது தனிப்பட்ட விதத்தில் அதற்கு வியாக்கியானம் அளிக்கப்படும் எதுவும் முரண்பாட்டின் விதையாகும். தேவன் அதை கௌரவிக்கமாட்டார். அவரால் அதை கௌரவிக்க முடியாது. (முரண்பாட்டின் விதை, பத்தி 31)

100. ஆதலால் பிரியமானவர்களே தேவனுடைய வார்த்தைக்கும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களுக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் உங்களை ஒப்புக்கொடுத்து, கர்த்தருடைய வருகைக்கு உங்களுடைய தீவட்டிகளில் எண்ணெயையுடைய, புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகையாக ஆயத்தமாயிருங்கள். ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள். ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக. ஆமென்.

மே/ஆகஸ்ட், 2004

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

குறிப்பு:

கர்த்தருக்குச் சித்தமானால் இந்தச் செய்தித் தொகுப்புக் குறித்து சென்னை, பெரவலூர், சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் இல்லத்தில் 2004, ஆகஸ்ட் மாதம், 22-ம் தேதி ஞாயிறு மதியம் நடந்த வழக்கு விசாரணைக் குறித்து 2004, அக்டோபர் மாதச் செய்தித் தொகுப்பில் எழுதுகிறேன். நான் அன்று பாஸ்டருடைய இல்லத்தில் விசாரிக்கப்பட்டு, எச்சரிக்கப்பட்டு, ஒரு அமைதலான சூழ்நிலையில் அனுப்பப்பட்டேன்.